பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 196

புதன்கிழமை
11 ஜூன் 2025

வைகாசி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## யாசகர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 11
பொது இடங்களில் யாசகம் பெறுபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப் படுத்த நடவடிக்கை 15

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு தமிழர் எதிர்ப்பில்லையாம்

### சிங்கள அமைப்பு கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11
தையிட்டி திஸ்ஸ விகாரையை யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்கள் எதிர்க்கவில்லை. புலம்பெயர் தமிழர்களே எதிர்க்கின்றனர் என்று சிங்கள அமைப்பொன்று தெரிவித்துள்ளது.
தையிட்டி திஸ்ஸ விகாரையில் இடம்பெற்ற வழிபாட்டின் 15






தையிட்டி

## திஸ்ஸ விகாரையில் நேற்றுப் பதற்றநிலை!

### நூற்றுக்கணக்கில் பொலிஸார் குவிப்பு
### கலகமடக்கும் பொலிஸாரும் களமிறக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைப் பகுதியில் நேற்று பலநூறு சிங்கள மக்கள் வழிபாடுகளுக்காக அழைத்துவரப்பட்ட நிலையில், அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. 15

## ஏழாலையில் வாள்வெட்டு; இருவருக்குப் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 11
ஏழாலையில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்து யாழ்ப் பாணம் போதனா 15

### பொதுமன்னிப்பு என்ற போர்வையில்

## 68 கைதிகள் இதுவரை சட்டவிரோத விடுவிப்பு!

### கொழும்பு நீதிமன்றில் பகீர் தகவல்

கொழும்பு, ஜூன் 11
ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு என்ற பெயரில் இதுவரை 68 கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்தார். மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸின் 15

### கைதி விடுவிக்கப்பட்ட விவகாரம்

## அதிகார முறைகேட்டுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

### நீதி அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 11
வெசாக்கை முன்னிட்டு பொதுமன்னிப்பு வழங்குவதற்காக நீதி அமைச்சு ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பிய பட்டியலிலும், ஜனாதிபதி செயலகம் சிறைச்சாலைத் தலைமையகத்துக்கு அனுப்பிய பெயர்ப் பட்டியலி 15



‘பொருள்களிலதான் கலப்படம் எண்டு பார்த்தால் பொதுமன்னிப்பிலையும் கலப்படம் செய்து கலக்கிப்போட்டினம் கண்டியளோ’

### சுதுமலை அம்மன் கோயில்

## தேர்த்திருவிழாவில் 3 சங்கிலிகள் மாயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 11
சுதுமலை அம்மன் ஆலயத் தேர்த்திருவிழாவில் மூன்று தங்கச் சங்கிலிகள் மாயமாகியுள்ளன என்று மானிப்பாய் பொலி 15

## காற்றாலை மின்னுற்பத்தி; மன்னாரில் எதிர்ப்புப் போர்

மன்னார், ஜூன் 11
மன்னாரில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் அத்துமீறிய வகையில் இடம்பெற்றுவரும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னாரில் இன்று பெரும் போராட்டமொன்று இடம் பெறவுள்ளது. 15

### தையிட்டி திஸ்ஸ விகாரையில்

## சிங்கள ஊடகவியலாளர்களுக்கு சிறப்புப் பாதுகாப்புடன் அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரையில் இதுவரை ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்படாத நிலையில், நேற்று சிங்கள ஊடகயவியலாளர்கள் சிறப்புப் பாதுகாப்புடன் பொலிஸாரால் விகாரைக் 15



மாங்குளம் வீதியில் விபத்து

## சட்டவிரோதக் கருக்கலைப்பு இளம் தாயொருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், சட்டவிரோதக் கருக்கலைப்பை மேற்கொண்ட பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.
தனது வீட்டில் கருக்கலைப்பைச் செய்துகொண்டபோதே அவர் உயிரிழந்துள்ளார். அந்தப் பெண் யாழ்ப்பாணம் 15

## வற்றாப்பளை உற்சவத்துக்கு சென்று திரும்பியவர் சாவு!

முல்லைத்தீவு, ஜூன் 11
முல்லைத்தீவு வற்றாப்பளை ஆலயத்தின் வருடாந்த உற்சவத்துக்குச் சென்று திரும்பிய இளைஞர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.
ஜோன் மலரவன் (வயது-20) என்ற இளைஞரே 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

AMNESTY INTERNATIONAL

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 10.06.2025 | திகதி 10.06.2025 | திகதி 10.06.2025 | திகதி 10.06.2025 | திகதி 10.06.2025 | திகதி 10.06.2025 | திகதி 10.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4098 | சீட்டிழுப்பு இலக்கம் 1165 | சீட்டிழுப்பு இலக்கம் 0124 | சீட்டிழுப்பு இலக்கம் 2204 | சீட்டிழுப்பு இலக்கம் 5856 | சீட்டிழுப்பு இலக்கம் 1886 | சீட்டிழுப்பு இலக்கம் 0431 |
| ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கினம் மேஷம் | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து V | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து M | ஆங்கில எழுத்து P |
| | | | சுப்பர் இலக்கம் 10 | | | |
| வெற்றி இலக்கங்கள் 05 07 20 58 | வெற்றி இலக்கங்கள் 15 18 34 38 | வெற்றி இலக்கங்கள் 2 7 0 2 | வெற்றி இலக்கங்கள் 18 43 64 68 | வெற்றி இலக்கங்கள் 8 7 9 6 3 9 | வெற்றி இலக்கங்கள் 25 36 50 76 | வெற்றி இலக்கங்கள் 9 6 3 9 |
| விசேட எழுத்து T | | | | | விசேட எழுத்து M | |

# செம்மணிப் புதைகுழி அகழ்வுகளை சர்வதேச தரநிலையோடு நடத்துக

## வலியுறுத்துகின்றது சர்வதேச மன்னிப்புச் சபை

**கொழும்பு, ஜூன் 11**

**யாழ்ப்பாணம் - செம்மணிப்பகுதியில் இடம்பெற்ற படுகொலை தொடர்பான விசாரணையின் வெளிப்படைத்தன்மையை இலங்கை முன்வைக்கவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம், சித்துப்பாத்தியில் உள்ள இரண்டாவது செம்மணி மனித புதைகுழி என்று சந்தேகிக்கப்படும் இடத்தில் நடத்தப்பட்ட அகழ்வுகளில் இதுவரை 19 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது இலங்கை உள்நாட்டுப் போரின்போது நடந்தது என்று தெரிவிக்கப்படும் நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பான நீண்டகாலமாக தாமதமாகிவரும் உண்மை மற்றும் நீதிக்கான தேடலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது. விசாரணையை வழிநடத்தும் நீதித்துறை மருத்துவ அதிகாரி 45 நாள் நீடிப்புக் கோரியுள்ளார் என்றும், அடுத்த கட்டத்துக்கான செலவு மதிப்பீட்டை சமர்ப்பிக்க நீதிமன்றத்தால் உத்தர விடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பேராசிரியர் ராஜ் சோமதேவாவால் செயற்கைக்கோள் படங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட சந்தேகத்துக்கிடமான அருகிலுள்ள பகுதிகள் ட்ரோன்மூலம் படம்பிடிக்கப்பட்டன. அந்தக் காட்சிகள் பகுப்பாய்வுக்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய அகழ்வாராய்ச்சியின் அடுத்த கட்டம் ஜூன் 26 ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப அகழ்வாராய்ச்சி நடத்தப்படுவதை உறுதிசெய்யவேண்டும் என்று இலங்கை அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது.

போதுமான வளங்களை ஒதுக்குதல், குடும்பங்கள் மற்றும் ஊடகங்களுக்கான அணுகலுடன் வெளிப்படைத்தன்மையைப் பராமரித்தல் மற்றும் தளத்தின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல் போன்றவற்றை முன்வைத்து வெளிப்படைத்தன்மையை முன்வைக்கவேண்டும் - என்றுள்ளது. (எ-125)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 10.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | வெற்றி வாரம் 0564 |
| ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கம் 8 7 8 3 1 5 | |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி 10.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2830 | ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கம் 14 15 30 31 | |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 10.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கம் 44 45 65 67 | வெற்றி வாரம் 4991 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி 10.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் 0701 | வெற்றி இலக்கம் 01 12 39 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி 10.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| விருச்சிகம் | வெற்றி இலக்கம் 17 26 47 54 | சீட்டிழுப்பு வாரம் 4542 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 10.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து M | சுப்பர் இலக்கம் 34 | வெற்றி இலக்கம் 06 12 47 71 | வெற்றி வாரம் 2006 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 10.06.2025 | தினம் செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 39 47 57 65 | வெற்றி வாரம் 2656 |

# ஐ.எம்.எப். அழுத்தம் சட்டவிரோதமானது!

## *ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூன் 11

மின்கட்டணத்தை அதிகரிக்குமாறு சர்வதேச நாணயநிதியத்தால் அரசுக்கு அழுத்தம் கொடுக்கமுடியாது. அது சட்டவிரோதமானது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றில் தொடர்ச்சியாக கேள்வி கேட்பதால் அரசாங்கம் சபாநாயகரைக்கூட ஓரங்கட்டிவிட்டு சஜித்தை அடக்குவதற்கு முயற்சிசெய்கின்றது. நாடாளுமன்றில் சில சம்பிரதாயம் உள்ளது. அதை சபாநாயகர் பின்பற்றுவதாக இல்லை.

அரசையும் எதிர்க்கட்சியையும் சபாநாயகர் ஒன்றாக கவனிக்கவேண்டும். ஆனால் அதிகமான நேரங்களில் அந்தக் கவனிப்பு எதிர்க்கட்சிக்குக் கிடைப்பதில்லை. சர்வதேச நாணய நிதியத்திடம் நான்காவது தவணைக் கடனைப் பெறுவதற்காக மின்கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசு முயற்சி செய்கிறது. இது நாணயநிதியத்தின் நிபந்தனை என்பதற்காக சட்டவிரோதமான ஒன்றைச் செய்யமுடியாது.

கட்டணத்தைக் குறைக்குமாறு அரசு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அழுத்தம் கொடுக்கிறது. இந்த ஆணைக்குழு நாணயநிதியத்தின் பக்கமிருந்து செயற்படமுடியாது. மக்களின் நலனுக்காகவே செயற்படவேண்டும் - என்றார். (ச-75)

### யாழ்.மாநகரசபைக்கான

# மேயர், துணைமேயரை பரிந்துரைத்தது தமிழரசு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மேயர் பதவிக்குத் திருமதி. விவேகானந்தராஜா மதிவதனியையும் துணைமேயர் பதவிக்கு இம்மானுவேல் தயாளனையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி பரிந்துரைத்துள்ளது.

யாழ். நல்லூரில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனின் இல்லத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற கட்சியின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபைக்கான மேயர், துணைமேயர் தெரிவுகள் நாளைமறுதினம் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-125)

# கம்பளைக் குடும்பம் இந்தியாவில் தஞ்சம்

கொழும்பு, ஜூன் 11

கம்பளையில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் அகதிகளாக தனுஷ்கோடியில் தஞ்சமடைந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்கள் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து பைபர் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடற்பகுதியில் வந்த திங்கட்கிழமை அதிகாலை சென்றடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சபைகளைக் கைப்பற்றுவதற்கு இலஞ்சம் கொடுக்கின்றது அரசு

## *அஜித் பி.பெரேரா குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூன் 11

தனக்கு பெரும்பான்மை இல்லாத சபைகளைக் கைப்பற்றி ஆட்சி அமைப்பதற்காக அரசாங்கம் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இலஞ்சம் வழங்குகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிசபைத் தேர்தல் வெற்றிகரமாக முடிவடைந்து உறுப்பினர்கள் அனைவரும் வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தால் அனைத்துச் சபைகளையும் கைப்பற்றமுடியவில்லை. 151 சபைகளில் மாத்திரமே 50 வீத பெரும்பான்மையைப் பெற்று ஆட்சி அமைத்துள்ளது.

பெரும்பான்மை இல்லாத சபைகளில் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்கமுடியும். அதைக் குழப்புவதற்காக அரசாங்கம் உறுப்பினர்களை வளைக்கும் வேலையில் இறங்கியுள்ளது. ஜனநாயக அடிப்படையில் அவ்வாறு செய்வது தவறில்லை. ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு இலஞ்சம் கொடுத்து வளைக்கமுயல்கின்றது. ஊழல், மோசடியை ஒழிக்கப் போவதாகக்கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அதே ஊழல், மோசடியைச் செய்கின்றது - என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமைக்கான கதவு திறந்தே இருக்கின்றது

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 11**
**தமிழ்மக்கள் தங்கள் பூர்வீக நிலங்களைத் தாமே ஆளவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் நாம் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேசி ஓர் இணக்கப்பாடு ஏற்படுத்தும் சூழலை உருவாக்கி வருகின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணிசார்பாக உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவான உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்த அடிப்படையிலேயே நாம் தமிழ்த் தேசியப் பேரவையுடன் ஒப்பந்தத்துடன் செயற்படும் வாய்ப்பை உருவாக்கியுள்ளோம். தமிழரசுக்கட்சியுடனும் தொடர்ந்து பேசிவருகின்றோம். ஒற்றுமைக்காக ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் கதவுகள் எப்போதும் திறந்துள்ளன.
தமிழ்மக்கள் மிகவும் நிதானமாகவிருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லோரும் சேர்ந்து உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமையுங்கள் என்றசெய்தியைத் தமிழ்மக்கள் உள்ளூராட்சிசபைத் தேர்தலின் மூலம் கூறியுள்ளனர். அதை உணர்ந்துகொண்டவர்கள் தமிழர் தேசத்தில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கவேண்டும்- என்றார். (எ-66)

# சொத்துகள் சோதனை; ஊழல்வாதிகள் திணறல்

கொழும்பு, ஜூன் 11
முன்னாள் அமைச்சர்களின் வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட சொத்துகள் அனைத்தும் சோதனையிடப்பட்டுவருகின்றன. பல சொத்துகளுக்கு அவர்கள் சரியாகக் கணக்குக்காட்டமுடியாமல் எப்படி ஈட்டப்பட்டது என்று கூறமுடியாமல் தடுமாறிவருகின்றனர் என்று அறியமுடிகிறது.
அத்துடன் முன்னாள் அமைச்சர்களால் சட்டவிரோதமான முறையில் ஈட்டப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் தொடர்பில் விசாரணை அதிகாரிகளுக்குத் தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன என்றும் தகவல்கள் கூறுகின்றன. (ச-இ)

# ஐ.எம்.எப். துணைப் பணிப்பாளர் இலங்கைக்கு வருகை



கொழும்பு, ஜூன் 11
சர்வதேச நாணயநிதியத்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் (FDMD) கீதா கோபிநாத் எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.
2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சர்வதேச நாணயநிதியத்தில் பணியாற்றும் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் ஒருவர் இலங்கைக்கு வருகை தருவது இதுவே முதல் தடவையாகும்.
இந்த விஜயத்தின்போது, நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் சர்வதேச நாணயநிதியம் இணைந்து நடத்தும் 'இலங்கையின் மீட்புப் பாதை; கடன் மற்றும் நிர்வாகம்' என்ற தலைப்பில் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள மாநாட்டில் கீதா கோபிநாத் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-இ)



# சிறை ஆணையாளர் விளக்கமறியலில்

கொழும்பு, ஜூன் 11
குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனியவை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அவர் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி பொதுமன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி சிறைக்கைதி ஒருவரை விடுதலை செய்தமை தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் மேற்கொண்டுவரும் விசாரணைகளின் பின்னணியில், சிறைச்சாலைகள் ஆணையாளர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# த. மு. கூட்டணி ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 11
ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைமைக் குழுவினருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. நுவரெலியா மாவட்ட உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஒத்துழைப்பது பற்றி உரையாடல் இடம்பெற்றதாகக் கூட்டணி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




# 'எட்டிப் பார்த்தால் என்ன?'

கச்சேரிமட்டத்தில நடக்கிற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு வாறதுக்கும், அதில பேசுறதுக்கும் - நான் முந்தி, நீ முந்தி- எண்டு அடிபடுற எங்கட எம்.பி.மார் பிரதேச மட்டங்களில நடக்கிற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களுக்குப் போறதுக்கு மட்டும் பஞ்சிப்படுகினமாம். கச்சேரி எண்டாத்தான் மீடியாக்காரரர் கனபேர் வருவினம், பெரிய பெரிய அதிகாரிமாரும் வருவினம். அதால அவைக்கு முன்னால படம் காட்டினால்தான் எடுபடும். பிரதேச மட்டங்களில நடக்கிற கூட்டங்களுக்குப் போனால் ஒண்டிரண்டு ரிப்போர்ட்டர்மார்தான் வருவினம். அதிலையும் யூரியூப்பர்மார் வராயினம். அதிகாரிமாரிலையும் ரண்டாம் கட்டத்தில இருக்கிறவையையும், அந்தந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பானவையையும் மட்டும்தான் கூட்டத்தில காணலாம். இப்பிடியான கூட்டங்களுக்கு போனால் தங்கட மதிப்புக் குறைஞ்சுபோடுமெண்டு நினைச்சோ என்னவோ எம்.பி.மார் பிரதேசமட்டக் கூட்டங்களில எட்டியும் பாக்கிறேலையாம்.

பிரச்சினையள். தேவையள் இல்லாத இடங்களுக்குப் போகாட்டிக்கூட பரவாயில்லை. ஆனால் எங்கையெல்லாம் சனத்துக்கு பிரச்சினையள் கூடுதலா இருக்குதோ அந்த இடங்களில நடக்கிற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்காவது உந்த எம்.பி.மார் போய் தங்கட திருமுகத்தைக் காட்டலாமெல்லோ. எப்பவுமே அடிமட்டத்தில இருந்துதான் பிரச்சினையளைக் கண்டறிஞ்சு அதுகளைத் தீர்க்கப் பாக்கோனும். பிரதேச மட்டக் கூட்டங்களுக்குப் போனால்தானே அங்க என்னென்ன பிரச்சினை இருக்கெண்டு எம்.பி. மாருக்குத் தெரியும். அதைவிட்டிட்டு கச்சேரியில போய் இருந்து தங்களுக்குள்ள கடிபட்டால் என்னெண்டு பிரச்சினையளைத் தீர்க்கிறது?

யாழ்ப்பாணத்தில தீவகம்தான் கனக்கப் பிரச்சினையள் உள்ள இடம். போக்குவரத்துப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, படிப்புப் பிரச்சினை, கரண்ட் பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினை, தண்ணிப் பிரச்சினை எண்டு அங்க ஒரே பிரச்சினை மயம்தான். அதுகளை என்ன ஏதெண்டு பார்த்துத் தீர்த்துவைச்சால், கச்சேரியில அதை ஒரு விசயமா எடுத்து நேரத்தை வீணடிக்கத் தேவையில்லையே. முளையிலேயே பிரச்சினையைக் கிள்ளாமல், வேடிக்கை பார்க்கிறதாலதான் அது பெரும் பிரச்சினையா மாறும். ரண்டுமூண்டு நாளைக்கு முதல் தீவக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடந்தது. அதுக்கு 'இளமையான' எம்.பி. மட்டும்தான் போயிருக்கிறார். இணைத்தலைவர் எண்டதாலதான் அவர் வந்தவர் எண்டும் கதை. வேற ஒரு எம்.பி. மாரும் அந்தக் கூட்டத்துக்குப் போகவேயில்லையாம். ரண்டுமூண்டு எம்.பி.மாருக்கு தீவகம்தான் பூர்விகம். அதிலையும் திசைகாட்டி எம்.பி.ஒருத்தர் தான் தீவகமைந்தன் எண்டுதான் போனமுறை எலக்சனுக்கு அடிக்கடி சொல்லி வாக்குக் கேட்டவர். அந்தத் தீவகமைந்தனுக்குக்கூட தங்கட ஏரியாவில நடக்கிற ஒருங்கிணைப் புக்குழுக்கூட்டத்துக்குப் போகோனும் எண்ட நினைப்பு வரேலையே. இனியாவது மிச்ச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களுக்குப்போய் சனத்தின்ர பிரச்சினையளைக் கேட்டு, அதுகளைத் தீர்க்கிற வழியளை எம்.பி.மார் பார்க்காட்டி, சனம் அடுத்த எலக்சனில உவையின்ர கணக்கைத் தீர்க்காமல் விடாதுகள் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக அமையும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடுவீர்கள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணம் வந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**துலாம்:** கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் சக பணியாளர்கள் உதவி செய்வார்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. வெளியூர்ப்பயணங்களைத் தவிர்த்துவிடவும். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**தனுசு:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது உணவு, தண்ணீர் விஷயத்தில் அலட்சியம் காட்ட வேண்டாம்.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், உரிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கவனமாக இருக்கவும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

# LOLC குழுமம் ரூ. 41 பில்லியன் இலாபம் ஈட்டியுள்ளதுடன் மொத்த சொத்துகளில் ரூ. 2 டிரில்லியனை மிஞ்சியுள்ளது, உலகளாவிய வளர்ச்சியின் வேகத்தால் இயக்கப்படுகிறது





LOLC குழுமம் 2024/25 நிதியாண்டில் ரூ. 41 பில்லியன் வரிக்குப் பிந்தைய இலாபத்தைப் பதிவுசெய்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 89வீதம் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. மேலும், ரூ. 48 பில்லியன் இயக்க இலாபத்தின் ஆதரவுடன் நிதிச் சேவைகளில் நிலையான விரிவாக்கம், தொடர்ச்சியான மூலோபாய சர்வதேச கையகப்படுத்துதல்கள் மற்றும் இலங்கையில் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றால் இந்த வலுவான செயற்றிறன் தூண்டப்பட்டது.

தற்போது 25க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு வரும் LOLC, நிதி சேவைகள், விவசாயம், பெருந்தோட்டம், வாகனம், உற்பத்தி, கட்டுமானம், கடல்சார், மின் உற்பத்தி, மருந்துகள் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றில் செயற்படும் இலங்கையின் மிகவும் சர்வதேச அளவில் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனக் குழுவாக தனது நிலையைத் தொடர்ந்து உறுதிப்படுத்துகிறது.

குழுவின் மொத்த சொத்துக்கள் 17வீதம் உயர்ந்து ரூ. 2.03 டிரில்லியனாக உயர்ந்தன. அதேநேரத்தில் பங்குதாரர்களின் பங்கு மதிப்பு ரூ. 343 பில்லியனாக உயர்ந்து 15% அதிகரிப்பைக் குறிக்கிறது. அதன் மொத்த கடன்பங்கு விகிதம் 1.2 மடங்கிலிருந்து 1.05 மடங்காக மேம்பட்டது. இது செயலில் உள்ள முதலீட்டு குழாய் இருந்தபோதிலும் அதிக இருப்புநிலைக் குறிப்பின் வலிமையைக் குறிக்கிறது.

### ஆபிரிக்க விரிவாக்கம் உலகளாவிய ரீதியை வலுப்படுத்துகிறது

கடந்த ஆண்டில் LOLC இன் முதலீட்டு மூலோபாயம் ஆபிரிக்காவின் தேயிலைத் துறையில் கையகப்படுத்துதல்களை முக்கியமாகக் கொண்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு பின்லேஸின் கென்ய செயல்பாடுகளை கையகப்படுத்தியதைத் தொடர்ந்து, குழுமம் கென்யா, ருவாண்டா மற்றும் தான்சானியாவில் உள்ள லிப்டனின் தோட்டங்களை கையகப்படுத்தியது. இந்த பரிவர்த்தனைகள் LOLC இன் உண்மையான பொருளாதாரத் துறைகளில் ஆழ்ந்த ஆர்வத்தையும், உலகளாவிய தேயிலை விநியோகச் சங்கிலியில் முக்கிய பங்கு வகிக்கும் நோக்கத்தையும் பிரதிபலிக்கின்றன. உள்நாட்டில், குழுமம் சியாரா கேபிள்ஸ் பிஎல்சியில் தனது சிறுபான்மை பங்குகளை கட்டுப்பாட்டுப் பங்குகளாக மாற்றுவதன்மூலம் தொழில்துறை உற்பத்தியில் தனது இருப்பை பலப்படுத்தியது. நிதியாண்டின் முடிவிற்குப் பிறகு, LOLC புஸ்ஸல்லாவ பிளான்டேஷன்ஸ் உரிமையையும், டீ ஸ்மால்ஹோல்டர் பேக்டரீஸ் பிஎல்சியின் கட்டுப்பாட்டுப் பங்கையும் வாங்கியது. இந்த நடவடிக்கைகள் குழுவின் தோட்டப் பங்குகளுக்குள் செங்குத்து ஒருங்கிணைப்பு மற்றும் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சேர்த்தல்களுடன், LOLC குழுமம் இப்போது சுமார் 100,000 ஹெக்டேயர் தோட்டங்களில் வளர்க்கப்படும் சுமார் 100 மில்லியன் கிலோகிராம் தயாரிக்கப்பட்ட தேயிலையின் வருடாந்திர உற்பத்தித் திறனுடன் செயற்படுகிறது.

### நிதி சேவைகள் தொடர்ந்து வருவாயை அதிகரிக்கின்றன

நிதிச் சேவைகள் குழுமத்தின் இலாபத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்திவருகின்றன, இந்தப் பிரிவு தொடர்ச்சியான செயற்பாடுகளிலிருந்து வரிக்கு முந்தைய ரூ. 52 பில்லியன் இலாபத்திற்கு ரூ. 41 பில்லியனைப் பங்களித்துள்ளது. இது குழுவின் முதன்மை வருவாய் இயந்திரமாக அதன் நிலையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

LOLC பைனான்ஸ் பிஎல்சி, வரிக்கு முந்தைய இலாபமாக ரூ. 30.8 பில்லியனைப் பதிவுசெய்து, துறையின் வளர்ச்சிக்கு தலைமைதாங்கியது இது ஆண்டுக்கு ஆண்டு 23% அதிகரிப்பு. நிறுவனத்தின் கடன் தொகுப்பு ரூ. 305 பில்லியனைத் தாண்டியது, அதே நேரத்தில் வாடிக்கையாளர் வைப்புத்தொகை ரூ. 225 பில்லியனை எட்டியது. நிகர செயற்படாத கடன் விகிதத்தில் 10.48வீதத்திலிருந்து 4.97வீதமா கூர்மையான குறைவு சொத்து தரம் மற்றும் கடன் இடர் மேலாண்மையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது. இந்த செயற்றிறன் ரூ. 150 பில்லியனின் வலுவான மூலதனத் தளத்தால் ஆதரிக்கப்படுகிறது. இது ஒழுங்குமுறை குறைந்தபட்சமான 17வீதத்தைவிட 25வீதத்துக்கும் அதிகமான மூலதன போதுமான விகிதமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா, மத்திய ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் உள்ள குறைந்த சேவை மற்றும் அதிக திறன் கொண்ட சந்தைகளில் குழுவின் நிதிச் சேவை வலையமைப்பு தொடர்ந்து வளர்ந்துவருகிறது. அங்கு உள்ளடக்கிய கடன் மற்றும் நுண்நிதி தீர்வுகளுக்கான தேவை வலுவாக உள்ளது. இந்த வேகத்தை கட்டியெழுப்புவதன்மூலம், குழு தற்போது தென் அமெரிக்காவில் உள்ள மூலோபாய விரிவாக்க வாய்ப்புகளை தீவிரமாக மதிப்பீடுசெய்து வருகிறது. அதன் உலகளாவிய இருப்பு மற்றும் நிதி உள்ளடக்கத்தில் தாக்கத்தை மேலும் விரிவாக்கும் நோக்கத்துடன் துறை ரீதியான பல்வகைப்படுத்தல் வருவாய் மீள்தன்மையை ஆதரிக்கிறது.

நிதிச் சேவைகளுக்கு அப்பால், LOLC இன் உற்பத்தி மற்றும் வர்த்தகப் பிரிவு வட்டிக்கு முன் ரூ. 4.2 பில்லியன் செயற்பாட்டு இலாபத்தை ஈட்டியது. இலங்கையின் நாணய நிலைப்படுத்தல், பணவீக்கத்தைக் குறைத்தல் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் மீட்சி போன்ற சாதகமான பொருளாதார குறிகாட்டிகளால் இது பயனடைந்தது.

சுற்றுலாத்துறையில், குழுமத்தின் [illegible] மற்றும் பொழுதுபோக்கு வணிகங்கள் வட்டிக்கு முன் ரூ. 2.8 பில்லியன் இயக்க இலாபத்தை ஈட்டியுள்ளன, இது சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட மீட்சியின் ஆதரவுடன் உள்வரும் பயண அளவுகள் கோவிட்க்கு முந்தைய நிலைகளை நெருங்கிவருவதால், இலங்கை, மாலைதீவுகள் மற்றும் மொரீஷியஸில் உள்ள LOLC இன் விருந்தோம்பல் சொத்துகள் வரும் ஆண்டில் மேலும் பயனடையத் தயாராக உள்ளன.

பெருந்தோட்டப் பிரிவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தது. உடபுஸ்ஸல்லாவ பெருந்தோட்ட பிஎல்சி மற்றும் ஹபுகஸ்தென்ன பெருந்தோட்ட பிஎல்சி ஆகியவை வரிக்கு முந்தைய இலாபத்தை முறையே ரூ. 883 மில்லியன் மற்றும் ரூ. 614 மில்லியன்களாகப் பதிவு செய்தன. இலங்கையின் செயற்பாட்டு சிறந்த நடைமுறைகளை அதன் புதிதாக கையகப்படுத்தப்பட்ட ஆபிரிக்க பெருந்தோட்டங்களில் பின்பற்ற குழு திட்டமிட்டுள்ளது.

LOLC இன் முடிவுகள், உயர் வளர்ச்சி எல்லைப்புற சந்தைகள் மற்றும் இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதாரம் இரண்டிலும் வலுவான இருப்புடன், பன்முகப்படுத்தப்பட்ட, உலகளாவிய ரீதியாக பொருத்தமான நிறுவனத்தை உருவாக்குவதற்கான அதன் மூலோபாய இலட்சியத்தை பிரதிபலிக்கின்றன. நிதி சேவைகள், விவசாயம், தோட்டக்கலை, வாகனம், உற்பத்தி, கட்டுமானம், கடல்சார், மின் உற்பத்தி, மருந்துகள் மற்றும் ஓய்வு ஆகியவற்றை உள்ளடக்கிய அதன் பல்துறை இலாகா, எந்தவொரு ஒற்றை சந்தை அல்லது துறையின் வெளிப்பாட்டைக் குறைக்க உதவியுள்ளது. ஒழுக்கமான மூலதன மேலாண்மை மற்றும் சமீபத்திய கையகப்படுத்துதல்களை ஒருங்கிணைப்பதற்கான தெளிவான வரைபடத்துடன், குழுமம் அதன் வளர்ச்சிப் பாதையைத் தக்கவைத்துக்கொள்ளவும், புவியியல் மற்றும் தொழில்கள் முழுவதும் நீண்டகால மதிப்பைத் திறக்கவும் நல்லநிலையில் உள்ளது.



இலங்கை புகையிரதநிலையங்கள் மற்றும் உப புகையிரதநிலையங்களுக்கிடையே மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் நடத்தப்பட்ட போட்டியில் சிறந்த பசுமை உப புகையிரதநிலையமாக மீசாலை உப புகையிரத நிலையம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. (ச-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள் என்பதற்கான அர்த்தத்தை முதலில் அறிந்துகொள்ளுங்கள், பிறகு பேசுங்கள்.

– எபிக்டடஸ் –

## என்ன செய்யப்போகிறார்கள்?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க் இந்த மாத இறுதியில் இலங்கை வருகின்றமை உறுதியாகியிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் ஒருவர் 9 ஆண்டுகளின் பின்னர் இலங்கைக்கு வரும் சந்தர்ப்பமாக இந்தப் பயணம் அமையவிருக்கின்றது. இலங்கை வரும் வோல்கர் டேர்க், பல தரப்புகளைச் சந்திக்கத் திட்டமிட்டிருக்கும்நிலையில், இறுதிப்போர் நடைபெற்ற பகுதிகளுக்கு அவர் செல்லக்கூடும் என்றும் நம்பப்படுகின்றது. இந்த நிலையில் தமிழர் தரப்பு அவரது இந்தப் பயணத்தை எவ்வாறு தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தப் போகின்றது ?

ஆயுதப்போராட்டம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட பின்னர், தமிழ் மக்கள் தங்களின் அரசியல் அபிலாஷைகளுக்கான தீர்வுகளையும், தமக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு நீதியையும் பெற்றுக்கொள்வதற்கான வழிகள் உள்நாட்டில் அடைக்கப்பட்டுவிட்டன. இலங்கையின் உள்ளக நீதிப் பொறிமுறை தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் ஏமாற்றத்தையே தந்துகொண்டிருக்கையில், சர்வதேச ரீதியிலான தலையீடுகளாலே இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுத்தரமுடியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இறுதிப்போரில் நடந்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொள்ளவும், குற்றமிழைத்தவர்களைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தவும், நீண்டகாலமாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை வழங்கவும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க சர்வதேச அமைப்புகளால் மட்டுமே முடியும். அந்தவகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இந்த விவகாரத்தில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது.கடந்தகாலங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, தமிழ் மக்கள் விடயத்தில் செயற்பட்ட விதத்தில் முழுமையான திருப்திகொள்ளமுடியாது. இருப்பினும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் ஏற்படுத்தப்பட்ட அழுத்தங்களால் இலங்கை சில விடயங்களில் இருந்துதப்பிச்செல்லமுடியாதநிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் மறுத்துவிடமுடியாது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகவும், இலங்கையின் அனுசரணையுடனும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செயல்வடிவம் பெறவில்லை, அதற்கான அழுத்தங்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கொடுக்கவில்லை என்ற அதிருப்திகள் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்றன. அந்த அதிருப்தியில் நியாயமும் இருக்கின்றது. ஆனால் இந்தத் தொய்வு நிலைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை மட்டும் சுட்டிக்காட்ட முடியாது, தமிழர்கள் தரப்பிலும் குறைபாடுகள் இருக்கின்றன என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் நடக்கும் போது மட்டும் வீச்சாகச் செயற்படும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அதன்பின்னர், அந்த விவகாரத்தில் அக்கறையற்றிருக்கும் போக்கே கடந்தகாலங்களில் இருந்திருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், தமிழ் மக்கள் விடயத்தில் இதுவரையில் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயலாற்றத் தவறியிருக்கின்றன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பக்க அமர்வுகளில் கலந்துகொள்வதாலோ, உரைகளை நிகழ்த்துவதாலோ தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறிவிடப்போவதில்லை. அதைத் தாண்டிய ஒன்றுபட்ட செயற்பாடுகளே அவசியமானவை. ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இந்தமாத இறுதியில் இலங்கை வரவுள்ளமை தமிழ் தரப்புக்கான ஒரு சந்தர்ப்பமே. அவரது வருகையின்போது இலங்கைமீது அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய சாதுரியமான நகர்வுகளைத் தமிழர் அரசியல் பிரதிநிதிகள் எடுக்க வேண்டியது அவசியம். அதை உணர்ந்து செயற்படுவார்களா? அல்லது வழக்கம்போன்று தங்களுக்குள் போட்டிபோட்டு இந்தச் சந்தர்ப்பத்தையும் சரியாகப் பயன்படுத்தாது தவறவிடுவார்களா?



## வரி வருவாய் உயர்வு

# நான்கு மாதங்களில் 236.60 பில்லியன்



கொழும்பு, ஜூன் 11

2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரச வரி வருவாயில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புப் பதிவாகியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள தரவுகளுக்கமைய, 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 1,218.07 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அரசாங்க வரி வருவாய் மற்றும் மானியங்கள், 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 236.60 பில்லியன் ரூபாவாக அதிகரித்து 1,454.67 பில்லியன் ரூபாவை எட்டியுள்ளது. இதன்படி, 19.42 வீத வளர்ச்சி பதிவாகியள்ளது.

2025 ஏப்ரலில் மாத்திரம் 463.19 பில்லியன் ரூபா வரி வருமானம் பதிவாகியுள்ளது.


இந்த வருமான அதிகரிப்புக்கு வாகனங்கள் மீண்டும் இறக்குமதி செய்யப்பட்டமையே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ரவி குமுதேஷ் பதவி நீக்கம்

மருத்துவ ஆய்வுகூட தொழிற்சங்கவாதி ரவி குமுதேஷ் அவரது பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அத்துடன் வெளிநாட்டுப் பயணத்தடையும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு தாபன விதிக்கோவைக்கு முரணாக தேர்தலில் போட்டியிட்ட காரணத்தினாலேயே ரவி குமுதேஷ் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ச-25.6)

## வாகனங்களின் விவரம் இணையத்தளத்தில் காட்சி



கொழும்பு, ஜீன் 11

வாகனங்களின் விவரங்கள் தொடர்பில் பார்வையிட சுங்கத் திணைக்களம் புதிய இணைப்பு (லிங்க்) ஒன்றை தமது இணையத்தளத்தில் இணைத்துள்ளது. இந்த இணைப்பில் வாகனங்கள் சட்டபூர்வமாக இறக்குமதிசெய்யப்பட்டனவா என்ற விடயமும் 2003ஆம் ஆண்டின் பின்னர் இறக்குமதிசெய்யப்பட்ட வாகனங்களின் விபரமும் 2011ஆம் ஆண்டின் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் விபரமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ச-41-6)

## இலங்கைக்குள் 7 யூத ஆலயங்கள்

கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் ஏழு யூத மத வழிபாட்டுத்தலங்கள் இருப்பதாக மத விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சர் சுனில் செனவி நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவற்றில் சில பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும், சில பதிவுசெய்யப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-25.6)



## போலி லேபல்களில் அழகுசாதனங்கள்!

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் உற்பத்திசெய்யப்பட்டது எனப் போலி லேபல்கள் தயாரித்து ஒட்டப்பட்ட அழகுசாதனப்பொருள்களை, பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையினர் கைப்பற்றியுள்ளனர். ராஜகிரியவிலுள்ள ஒரு தொழிற்சாலையிலேயே இவை உற்பத்திசெய்யப்பட்டுள்ளன. இந்த போலி உற்பத்திகள் நாடு முழுவதிலுமுள்ள அழகுசாதனப்பொருள்கள் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது. (ச- 25, 6)


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளை வியாழக்கிழமை- வைகாசி 29

12.06.2025

சுபநேரம் : 07.22- 08.52

ராகுகாலம் : 01.22-02.52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திஸ்ஸ விகாரைக்கெதிரான நேற்றைய போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள்

# அடக்குமுறை, உரிமைகள் பறிப்பு சிறுபான்மையினம் மீது முழுவீச்சு

## நீதி சமாதான நல்லிணக்கத்துக்கான பணியகம் வேதனை

**யாழ்ப்பாணம், ஜூன் 11**

**மக்களின் உரித்துக்காணிகளைக் கையகப்படுத்தி, தனியார் காணிகளுக்குள் அத்துமீறி கட்டப்படுகின்ற விகாரைகளைநோக்கி காணி உரிமையாளர்கள் தொடர்ந்து போராடிவருகின்றனர். அடக்குமுறைகளும் உரிமை மறுப்புகளும், தான் தோன்றித்தனமான பொறுப்பற்ற அரசியல் அதிகாரவீச்சுகளும் சிறுபான்மை இன மக்களைநோக்கி செயற்படுத்தப்பட்டுக்கொண்டிருப்பது வேதனை அளிக்கின்றது.**

இவ்வாறு நீதி சமாதான நல்லிணக்கத்துக்கான பணியகம் அறிக்கையொன்றை வெளியிட்டு சுட்டிக்காட்டியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

போரின் பிற்பாடு ஏறக்குறைய 16 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் தேசிய ஒருமைப்பாட்டையும் இன, மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தவேண்டிய காலத்தில் பொறுப்பற்ற அரசியல் அதிகாரவீச்சு சிறுபான்மை இன மக்களை நோக்கி அவ்வப்போது செயற்படுத்தப்படுகின்றது.

இன, மத சமூக நல்லிணக்கத்திற்கு பாதகத்தை விளைவிக்கும் செயற்பாடான தனியார் காணிகளுக்குள் அத்துமீறிய பௌத்தவிகாரைகளின் கட்டுமானங்கள் வெளிப்படையாக மத வேறுபாட்டையும் பிரிவினை மனப்பான்மையையும் அதிகாரத்தையும் வெளிப்படுத்துகிறது.

அத்துமீறி அடுத்தவர் காணிகளுக்குள் கட்டப்படுகின்ற மதத்தலங்களில் ஆன்மீகத்தைத் தேடுவது அர்த்தமற்றதும் அநியாயமானதும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரித்து அவர்களுக்குரிய காணிகளை மீள ஒப்படைக்க முயற்சிப்பது உங்களுடைய கடமை என்பதையும் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ச-125,26)

### தையிட்டிக்கு வந்த
# பெரும்பான்மையினத்தவர் கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 11

தையிட்டியில் வழிபாட்டில் ஈடுபட வருகைதந்த இளைஞர் ஒருவர் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தையிட்டிப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் இளைஞர் ஒருவர் நடமாடியுள்ளார். அதனையடுத்துப் பொலிஸார் அவரை விசாரிக்க முற்பட்டபோது சிங்கள அரசியல்வாதி ஒருவரின் பெயரை குறிப்பிட்டு நான் அவருடைய ஆள் எனவும் வழிபாட்டுக்கே வந்தேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவரைச் சோதனையிட்டபோது அவரிடமிருந்து 5 கிராம் 2 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டதையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டார். (ச-125-26)



கொழும்புத்துறை மேற்கு வதிரிபிட விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-17)



யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்றங்களுக்காக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பாகப் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தேர்வுசெய்யப்பட்டவர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் முன்னிலையில் பொற்பதி அறிவாலயம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. (ச-28)

# வலி. வடக்குப் பிரதேசசபைக்கு புதிய செயலராக சி. சிவானந்தன்

யாழ்ப்பாணம், ஜூன் 11



வட மாகாணக் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய யாழ். குப்பிழானைச் சேர்ந்த சிவகுமாரன் சிவானந்தன், வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் புதிய செயலாளராக அண்மையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளராக இரண்டரை வருடங்களுக்கும் மேலாகக் கடமையாற்றியவர் சு. சுதர்ஜன், தற்போது காரைநகர் பிரதேச சபையின் புதிய செயலாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ச-25,66)

# கஞ்சாவுடன் ஒருவர் சுழிபுரத்தில் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 11

சுழிபுரத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

விசேட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரை வழிமறித்து சோதனையிட்டபோதே சந்தேகநபரிடமிருந்து ஒரு கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை கைதுசெய்து மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தியபோது சந்தேகநபர் கஞ்சாப் பாவனைக்கு அடிமையானவர் எனத் தெரியவந்தது. சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-125)

# கசிப்புடன் ஒருவர் உடுவிலில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 11

உடுவில் பகுதியில் 5 போத்தல் கசிப்புடன் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உடுவில் மயான வீதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக 5 போத்தல் கசிப்புடன் குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபருக்கு ஏற்கனவே மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு நிலுவையிலுள்ள நிலையில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

தமக்கான சுயமரியாதையுடன் கூடிய அங்கீகாரம் கிடைக்கவேண்டும் எனத் தெரிவித்து மூன்றாம் பாலினத்தவர்கள் ஏற்பாடுசெய்த நடைபவனி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகி தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் முன்பாக நிறைவடைந்தது. (ச-22,110)



# 110 கிலோ ஹெரோய்ன் இலங்கையில் மீட்பு

கொழும்பு, ஜூன் 11

வீரகெட்டியப் பகுதியில் 110.46 கிலோ ஹெராய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. தங்காலை பிரதேச குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கடந்த திங்கட்கிழமை மேற்கொண்ட விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின்போது அவை மீட்கப்பட்டன. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஏல விற்பனை

பயன்பாட்டிலுள்ள ஓட்டுடன் கோயில் கூரை விற்பனைக்குண்டு.

ஏல விற்பனை-21.06.2025 (சனி)
நேரம் - 09.00 மணி
இடம் - ஆலய வளாகம்

திருநெல்வேலி அரசடி
ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள்
ஆலய பரிபாலன சபை.

தொடர்பு: பொருளாளர்
077 386 7458



## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE /C1/2025/04 | Converting Part of Block "A" of Faculty of Management Studies and Commerce as Student Study Area at University of Jaffna | 6.17 | 90 | C8 or above | Rs. 65,000.00 30.10.2025 | Rs. 2,500.00 |
| 2 | YA/CWP/RE /C1/2025/05 | Supply & Installation of Air Conditioners for the BBM Department at Faculty of Management Studies & Commerce, University of Jaffna | 4.84 | 45 | C8 or above | Rs. 50,000.00 30.10.2025 | Rs. 2,500.00 |
| 3 | YA/CWP/RE /C1/2025/06 | Supply & Installation of Air Conditioners for Lecture hall (A3) at Faculty of Management Studies & Commerce, University of Jaffna | 5.82 | 60 | C8 or above | Rs. 60,000.00 30.10.2025 | Rs. 2,500.00 |
| 4 | YA/CWP/RE /C1/2025/07 | Improvement of Existing Electrical Panel at Library Block, University of Jaffna | 1.91 | 30 | C9 or above | Rs. 20,000.00 30.10.2025 | Rs. 1,500.00 |
| 5 | YA/CWP/RE /C1/2025/08 | Renovation of Existing Roof Structure of the Library Block, University of Jaffna | 15.00 | 120 | C7 or above | Rs. 150,000.00 30.10.2025 | Rs. 5,000.00 |
| 6 | YA/CWP/RE /C1/2025/09 | Extension of the Building for Department of Fisheries at University of Jaffna – Stage III | 22.80 | 90 | C6 or above | Rs. 230,000.00 30.10.2025 | Rs. 5,000.00 |
| 7 | YA/CWP/RE /C1/2025/10 | Installation of Green Diamond Mesh at the Faculty of Technology Premises, University of Jaffna, Kilinochchi | 7.00 | 60 | C8 or above | Rs. 70,000.00 30.10.2025 | Rs. 2,500.00 |
| 8 | YA/CWP/RE /C1/2025/11 | Improvement of Existing Canteen Building (Stage II) for the Faculty of Technology, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi | 9.67 | 90 | C8 or above | Rs. 100,000.00 30.10.2025 | Rs. 2,500.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 11th June 2025 until 2nd July 2025 from 9:00 hrs to 16:00 hrs** and upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach on or before 10.00 hrs on the 3rd July, 2025. Bids will be opened soon after closing, at 10.00 hrs on the 3rd July, 2025** at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **91 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna."**
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the **Board Room, University of Jaffna, Thirunelvely** at 10.00 hrs on the **25th June, 2025** for the bid No. 01, 03,04, 05 and 06 and at the **Engineering Service Division, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi** at 10.00 hrs on the **26th June, 2025** for the bid No. 07 and 08.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
09.06.2025

# வங்காலைப் பங்கில் முப்பெரும் விழா

மன்னார், ஜூன் 11

மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலை புனித ஆனாள் ஆலயப் பங்கில் புதிய ஆயரை வரவேற்றல், உறுதிபூசுதல் திருவருட்சாதனம் வழங்கல் மற்றும் ஒரு வருட காலமாக பங்கில் கடமையாற்றி இடம்மாற்றம் பெற்றுச்செல்லும் உதவிப் பங்குத்தந்தைக்கு பிரியாவிடை ஆகிய விழாக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. மன்னார் மறைமாவட்டத்தின் முதிய பங்குகளில் ஒன்றான வங்காலை புனித ஆனாள் ஆலய பங்குக்கு மன்னார் மறைமாவட்டத்துக்கு, புதிதாக நியமிக்கப்பட்ட புதிய ஆயர் அ.ஞானப்பிரகாசம் ஆண்டகை முதல்முறை யாக வருகைதந்தபோது அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன்பின்னர் கத்தோலிக்க இறை மக்களுக்கு வழங்கப்படும் திருவருட்சாதனங்களில் ஒன்றான உறுதிபூசுதல் எனும் திருவருட்சாதனம் அப்பங்கிலுள்ள 77 இளைஞர் யுவதிகளுக்கு ஆயரால் வழங்கப்பட்டது. நிறைவில் இந்த பங்கில் கடந்த ஒரு வருடமாக உதவிப் பங்குத்தந்தையாக கடமைபுரிந்து மாற்றலாகிச் செல்லும் அருட்பணி டிசாந்தன் அடிகளாருக்கு பிரியாவிடை வைபவமும் நடைபெற்றது. (எ-60)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 11

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணச் சொற்பொழிவுத்தொடர்- 25, ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத க்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார். பிரசங்க பூஷணம் செ.த.குமரன் "சுரம்புகு படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (ச- 25)

---

யாழ்ப்பாணம், ஜூன் 11

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஏற்பாட்டில், வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 9, தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் "உக்கிரபாண்டியன் திருவவதாரப்படலம்" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ச- 25)



# ஊர்காவற்றுறையில் படகொன்று தீக்கிரை

யாழ்ப்பாணம், ஜூன் 11

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லன் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த படகொன்று தீக்கிரையாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் படகின் உரிமையாளர் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி

# 4 மாணவிகளின் ஒளிப்படங்களை ஆபாசமாக மாற்றியோர் மறியலில்

கொழும்பு, ஜூன் 11

நான்கு மாணவிகளின் படங்களைத் திருடி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவற்றை ஆபாசமாக மாற்றிய இரண்டு மாணவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஹொரனை நீதவான் சந்தன கலன்சூரியவின் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)

# சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜீன் 11

சைவபரிபாலனசபை நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை தினம் சைவபரிபாலனசபை உப தலைவரும் தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளருமான பி.என்.சுதர்சன் தலைமையில் நாளை வியாழக்கிழமை காலை 9மணிக்கு சைவ பரிபாலனசபை ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-41)

## வலி கிழக்கு வடபகுதி பரநோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி (வ.து) கிளைக்குழுத் தெரிவு தொடர்பான வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் தொடர்பான அறிவித்தல்

**எமது சங்கத்தில் 31.05.2025 வரை வாக்களிக்க தகுதியுள்ள வாக்காளர் பட்டியல்கள் இயங்கும் கிளைநிலையங்களிலும், இயங்காத கிளை நிலையங்களின் வாக்காளர் பட்டியல்கள் பருத்தித்துறை வீதி புத்தூரில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக்காரியாலத்திலும் 11.06.2025ல் இருந்து 30.06.2025 வரை காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. இப் பட்டியலில் உள்ள பெயர் விபரங்கள் முகவரிகள் தொடர்பான ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் 30.06.2025ந் திகதிக்கு முன் செயலாளர் வலி கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி, பருத்தித்துறை வீதி புத்தூர் எனும் முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.**

**குறிப்பு: ஏதேனும் அடிப்படையில் கிடைக்கப்பெறாதவிடத்து**

**தலைவர் 11.06.2025 செயலாளர்**

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை யோகேந்திரா

**(Retired Technical Officer GTZ, Word Vision, ICRC)**



தோற்றம் 02.07.1948 — மறைவு 08.06.2025

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கண்டிவீதி, சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை யோகேந்திரா கடந்த (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பரிமளம் தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான யோசப் - மேரிமாக்றித் ஆகியோரின் அன்பு மருமகனும், அமிர்தா (ஓய்வு பெற்ற ஆசிரியை நாவாந்துறை றோ.கா. வித்தியாலயம்) அன்புக் கணவரும், பிரசாந்தி, பிரதீபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன் (கொழும்பு) சகோதரனும், லொயிற், சொலங்கா (கனடா), ஆகியோரின் மாமனாரும், எபினேஷ், ஜெய்டன், யோஷாயா, ஜோவான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (12.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு சியோன் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**076 686 5994, 077 662 1932**

(CS/58539) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 04 . 1936 — மறைவு 08 . 06 . 2025



### கிறேஸ் பாக்கியரத்தினம் வெற்றிவேலு

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறேஸ் பாக்கியரத்தினம் வெற்றிவேலு கடந்த (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பத்தினி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஜோர்ஜ் வெற்றிவேலுவின் (கணக்காளர் - கல்வித்திணைக்களம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம், ஞானரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இரத்தினவதனா (ஓய்வு பெற்ற ஆசிரியை சென்ஜோன்ஸ் கல்லூரி), இரத்தினமாலா, காலஞ்சென்ற இரத்தினராசா (முன்னாள் பொறியியலாளர் கல்வி திணைக்களம் வடக்கு கிழக்கு), இரத்தினவேல் (யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்), காணாமலாக்கப்பட்ட இரத்தினசிங்கம், இவ்லின் இரத்தினலீலா (கனடா - முன்னாள் ஆசிரியை யாழ்ப்பாணக்கல்லூரி.) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் அருட்செல்வம் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - சென்ஜோன்ஸ் கல்லூரி) , திரு கருணாமூர்த்தி (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), பிரபதாரணி (கனடா), சுபாங்கனி, ராஜ்குமார் (கனடா) ஆகியோரின் மாமியாரும், மேரிகாஞ்சனா (அரச ஈட்டு முதலீட்டு வங்கி - வவுனியா), சுஜந்தன் (பொறியியலாளர் - கனடா), மாதுரி (பொறியியலாளர்), தெபோரா (பல்கலைக்கழக மாணவி), டானியல்ராஜ் (பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவன்), ரூத் காருண்யா (மாணவி HNDE-English), டினோஜன், இவாஞ்சலின், நிம்றோ (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), அன்ரே (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், ஜெசிக்கா, ஜெனிற்றா, ஜெரோமி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.06.2025) புதன்கிழமை முற்பகல் 9:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நேரியதூது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

**தகவல் : குடும்பத்தினர்**
**லீலா-மகள் - 001 647 764 9754**
**நிம்றோ- பேரன் - 077 425 7960**
Home - 021 227 1194

**இரத்தினவாசம்,**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி**

(CR/45132) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 10 . 1945 — மறைவு 10 . 06 . 2025



### சிவஞானம் சௌபாக்கியம்

(சங்கீத வித்துவான்)

கொழும்பு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், 1, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சௌபாக்கியலக்ஷ்மி சிவஞானம் அவர்கள் நேற்று (10.06.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-சரஸ்வதி (புகையிரத திணைக்கள எந்திரி) தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற வடிவேல்-பராசத்தி தம்பதியின் பாசமிகு மருமகளும், சிவஞானம் (Rt Production Manager Paranthan Chemical) அன்பு மனைவியும் தக்ஷாயினி (Operations Manager Mercantile Security Services Pvt.Ltd) அவர்களின் அன்புத் தாயாரும் விஜயானந்தன் (Assistant Manager Heritage Teas) அவர்களின் அன்பு மாமியாரும் தருண், கார்த்திக் (Jaffna Central College) அவர்களின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான Dr.ஜெகநாதன், கைலைநாதன், புனிதவதி மற்றும் Dr.விஸ்வநாதன் ஆகியோரின் சகோதரியும் மனோரஷிதா, பிரியதர்ஷினி (ஓய்வு நிலை அதிபர்), சசிரூபினி, யோகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 322 4154**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
11.06.2025
புதன்கிழமை

ஒவ்வொரு நாளும் ஆண்டின் சிறந்த நாளென்று உங்கள் இதயத்தில் எழுதிக் கொள்ளுங்கள்.
- வால்டோ எமர்சன்



# புறக்கணிப்பற்ற சமூகம் உருவாக சைகைமொழியை அங்கீகரித்தல்!

கட்டுரையாளர்கள்:
பேராசிரியர் திருமதி ச.சிவாணி,
கலாநிதி திருமதி ச.டிலோஜினி,
ம.சத்தியகுமார்,
திருமதி த.தசிகா,
கு.ஜெகாசினி,
ரா.சிறீரங்கநாயகி,
வி.திவாகர்
(யாழ்ப்பாணப் பல்கைக்கழகம்)

குழந்தையை அதனது தாய் தன் மடி மீது வைத்து உரையாடும்போது தன் தாய் தன்னோடு பேசும்மொழியை அந்தக் குழந்தை தனக்கான தாய்மொழியாக அடையாளம் காண்கிறது. இதுவே பின்னர் அதன் தாய்மொழி எனப்படுகிறது. எந்தக் குறைபாடுகளுமற்ற சாதாரண குழந்தை தாயின் ஒலியையும் உதட்டசைவையும் கொண்டு தாய்மொழியைக் கற்றுக்கொள்கிறது.

ஆனால் கேட்கும் திறனற்ற, குரல் வளமற்ற குழந்தை தன் தாயின் உதட்டசைவுகளை (அது மொழி பேசும் தாயாகவோ அல்லது சைகை மொழி பேசும் தாயாகவோ இருக்கும் போது) வைத்துக்கொண்டு இதுதான் தன்மொழி என்று கற்றுக்கொள்கிறது.

துரதிஷ்டவசமாக பல குழந்தைகள் மௌனங்களின் குழந்தைகளாகப் பிறந்துவிடுகின்றனர். இவர்களுக்கு தமது தாய்மொழியைப் பேசத்தெரியாது. உணர்வுகளை உதட்டை அசைப்பதன்மூலம் சைகைகளை வெளிப்படுத்துவதன்மூலம் தமது தாய் மொழியை அடையாளம் காட்டுகின்றனர். இத்தகைய சைகை மொழிபேசும் மக்களின் அடிப்படையான அங்கீகரிக்கப்பட்ட சைகை மொழித்தேவையைப் பூர்த்திசெய்யவேண்டியது இன்றைய காலத்தேவையாகக் காணப்படுகின்றது.

கிளிநொச்சியில் செயற்பட்டுவரும் 'தர்மம்' நிலையமானது கடந்த 2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி விழிப்புணர்வுப் பரப்புரை ஒன்றினை ஒருங்கமைத்திருந்தது. இந்தப் பரப்புரைக்கூட்டத்தில் இலங்கையின் பல பாகத்திலும் வாழும் சைகைமொழி பேசும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான செவிப்புலனற்ற வாய்பேசமுடியாத மக்கள் அவர்களது சமூகத்தின் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டு மிகவும் ஆர்வத்துடன் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையமானது இந்த விழிப்புணர்வுப் பிரசாரத்தில் அக்கறைசெலுத்தும் ஒரு தரப்பாகவும் இணை நிறுவனமாகவும் முழுமையான ஆதரவினை வழங்கியிருந்தது. இந்தப் பொதுப் பிரச்சினையில் முக்கியமாக பங்காற்றியதற்கான அடிப்படைக் காரணம், சைகைமொழிபேசும் மக்களில் அதிக பெண்கள் இந்தக் குறைபாட்டினால் பாதிக்கப்படுவதோடு, அவர்களால் பராமரிக்கப்படும் மற்றும் அவர்களில் தங்கிவாழும் பிள்ளைகள், பெற்றோர், வாழ்க்கைத்துணைகளால் அவர்கள் நாளாந்தம் மிகவும் வேதனைகளையும், பிரச்சினைகளையும் அனுபவித்து வருகின்றதால், பால்நிலைசார் சமத்துவத்தைப்பேணுவதில் அக்கறைசெலுத்தும் பல்கலைக்கழக அலகாக இவர்களது நலன் சார்ந்து ஏதேனும் பங்களிப்பினை மேற்கொள்ளமுடியும் என்பதனாலாகும். இந்தப் பங்குபற்றலானது, பல்கலைக்கழகம் இச்சமூகப் பிரச்சினையை அணுகுவதன்மூலம் ஏதோவொரு தீர்வை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கவேண்டும் எனும் அக்கறையுமாகும்.

## அற்றுப்போன அக்கறை

எங்களில் எத்தனை பேருக்கு இந்த விசேட பிரச்சினை உடைய காதுகேட்காத, வாய்பேச முடியாத மக்களின் பிரச்சினைகள் பற்றித் தெரியும்?. கிராமங்களில் சைகைமொழியைக்கொண்டு தங்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை, தேவைகளை நிறைவேற்றமுடியாத பலவிதமான மக்கள் நாளாந்தம் துன்பங்களை அனுபவித்த வண்ணம் உள்ளனர் என்பதைப் பற்றிய புரிந்துணர்வு எம்மில் பலபேரிடம் இல்லை. இதில் குறிப்பாக பெண்கள் காதுகேட்கமுடியாத, வாய்பேச முடியாதவர்களாக இருப்பதோடு, தமது பிள்ளைகள், கணவர், பெற்றோர், ஏனைய உறவினர்கள் இத்தகைய குறைபாடுகளோடு இருக்கும்போது அவர்களைப் பராமரிக்கும் பெண்கள் படும் துன்பங்கள் தொடர்பாக எமது சமூகத்தில் எந்தவிதக் குறைபாடுகளும் இன்றி வாழும் எத்தனை பேர் இதற்காகக் குரல்கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.




இலங்கையில் 2024ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, ஏறக்குறைய 3 இலட்சம் சிங்கள மக்கள் இக்குறைபாட்டோடு வாழ்கின்றனர். துரதிஷ்டவசமாக எமது தமிழ்ச் சமூகத்தில் இத்தகைய குறைபாடுடைய மக்கள் தொகை தொடர்பான தரவுகளைத் தரக்கூடிய விதத்தில் இதுவரையும் எந்தவொரு ஆய்வும் இடம்பெறவில்லை. இவர்களைப் பற்றிய பிரச்சினைகள் மற்றும் புள்ளிவிபர ஆய்வுகள் மேற்கொள்ளப்படாததால் இந்தப் பிரச்சினை உடைய மக்கள் பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

இவ்வாறான பிரச்சினைகளைக் கொண்ட சமூகத்திலிருந்து, வெளிநாடுகளுக்குச் செல்வோர் அங்கு மிகவும் சிறப்பாகக் கிடைக்கும் நன்மைகளை அனுபவித்து, தொழில் மற்றும் வாழ்க்கைத்தரத்தில் மேலோங்கிக் காணப்படுகின்றனர். ஆனால் தனது சொந்தநாட்டில், சொந்தப்பிரதேசத்தில், தனது கிராமத்தில், வீட்டில் வாழும் இத்தகைய குறைபாடுடைய மக்கள், தனது வீட்டில் இருக்கும் உறவுகளோடுகூட தொடர்பாடலை ஏற்படுத்திக்கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். இந்தச் சமூகத்தில் உள்ள மக்கள் தமக்குத்தாமும் மற்றவர்களோடும் சமூகமயப்படுத்தமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருப்பது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும். இதனால் வேறு நாடுகளுக்குச் சென்றால் தமது வாழ்வு மேம்படும் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதனால் இவர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடு மாறுவதைப் பெரிதும் விரும்புகின்றனர். இந்த நிலையானது மிகவும் ஒரு வேதனைக்குரிய விடயமாகவும் இந்த மக்கள் பிரிவினருக்கான பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய, அங்கீகரிக்கப்பட்ட சைகை மொழிக்கான அவசர தேவையானது, பூர்த்திசெய்யப்படவேண்டும் என்பதை இங்கு நாம் வலியுறுத்துகின்றோம்.

## மொழிச்சிக்கல்

சிங்கள மக்கள் சிங்களமொழியை தாய்மொழியாகக் கொண்டு தமது சமூகக் குழுக்களுடன் தொடர்புபடுத்துகின்றார்கள். தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் சிங்கள மக்களோடு தொடர்பாடவேண்டின், அவர்கள் தமிழைச் சிங்களத்தில் மொழிபெயர்த்தோ அல்லது சிங்களத்தைத் தமிழில் மொழிபெயர்த்தோ, தமது தொடர்பாடலை மேற்கொள்கின்றனர். இங்கு இரண்டு மொழியிலும் அந்த இரண்டு மொழிக்கான மொழிபெயர்ப்புகளும் தேவைப்படுகின்றன.

ஆனால் வாய்பேசமுடியாத, கேட்கும் திறன் அற்றோருடைய அனுபவமானது இங்கு முற்றிலும் வேறுபட்டது. எமக்கு எழுதுவதற்கும் பேசுவதற்கும் ஒரு மொழி காணப்படுகின்றது. அவர்களுக்கு அவ்வாறன்றிப் பேசுவதற்கு சைகைமொழியும் எழுதுவதற்கு தாய்மொழியுமாக இரண்டு மொழிகளைக் கையாள வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

உண்மையில் இந்த இருவேறு விதமான மொழிகளின் பயன்பாடானது இந்தச் சமூகத்தினரிடையே குறிப்பிட்ட சவால்களையும் பிரச்சினைகளையும் உருவாக்குவதோடு வெவ்வேறு சமூகத்துடன் அவர்கள் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு பல வெளிப்பட்டாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

ஆனால் இத்தகைய வெளிப்பாட்டாளர்கள் மிகவும் குறைவாகக் காணப்படுவதால் இவர்களுடைய சமூக உள்வாங்கல் மிகவும் கேள்விக்குறியாக உள்ளது. பொது இடங்களிலும் அவர்கள் எங்கெல்லாம் சேவை பெறச் செல்லுகின்றார்களோ அந்தந்த இடங்களிலும் அவர்கள் தமது கருத்துகளை வெளிப்படுத்த முடியாதவர்களாகவும் பொது இடங்களில் நடைபெறுகின்ற கலந்துரையாடல்களில் அவர்கள் உள்ளடங்கப்படாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் அவர்களது உள்ளுணர்வு தம்மை புறக்கணிக்கப்பட்டவர்களாகவே உணரச்செய்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சமுக வாராஹிஅம்மனின் பஞ்சமி திதி வழிபாடு

■ பத்மராசன் கிஸ்ணவேணி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கொக்குவில் மேற்கு வாராஹிபுரம் அம்மன் ஆலயத்தில் பஞ்சமி திதி வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. அருள்மிகு அம்பிகையின் அற்புதங்கள் அளவிடற்கரியவை. தெய்வ வழிபாடுகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது சக்தி வழிபாடாகும். ஸ்ரீ வாராஹி என்ற திருநாமம் தன் பேரன்பால் உலக உயிர்களை வசப்படுத்துபவள் என்ற பொருளுடையதாகும்.

கொக்குவில் மேற்கு வாராஹிபுரம் ஆலயம் சுப்பர் சின்னையா என்பவரால் 1915 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இவரது கனவில் அம்பிகை தோன்றி தனக்கென ஓர் ஆலயம் அமைக்குமாறு பணித்தமையால் இந்த ஆலயம் உருவாக்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டு முத்தையா மார்க்கண்டு என்பவரின் மருமகன் சுப்பையா நல்லையா தலைமையில் தேவஸ்தான புனர்நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்டன. அக்காலத்தில் ஸ்ரீ வாராஹியின் திருவுருவம் தென்னிந்தியாவிலிருந்து ஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளின் உதவியால் பெறப்பட்டு, மூலவராக அமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஆலயத்தை ஆண்வழி வம்சத்தினரே நிர்வகித்துவருகின்றனர். தற்போது கோபிநாத் பரமேஸ்வரன் ஆலயப் பொறுப்பை ஏற்று திறம்பட நிர்வகித்துவருகிறார்.

அன்னை ஸ்ரீ வாராஹி வெற்றிக்கு வழிகாட்டும் தெய்வம். உலக ஜீவராசிகள் பூமிக்கு ஆபத்து வந்து கதறியபோது, வாராஹம் (பன்றி) வடிவம் எடுத்து பூமியைத் தாங்கிக்காத்தார். இதனாலேயே வாராஹி என்ற பெயர் வந்தது. அன்னையின் திருவுருவம் பன்றியின் தலை மற்றும் அழகிய பெண் உடலமைப்புடன் அமைந்துள்ளது. வாராஹம் என்பதற்கு பன்றி என்பது பொருளாகும். வாராஹிக்கு ஆதி வாராஹி, மஹா வாராஹி, வர்த்தினி வாராஹி, மஹிசாசுரமர்த்தினி வாராஹி, சிம்ஹவாகினி வாராஹி எனப் பல பெயர்கள் உண்டு. அன்னையின் வாகனங்களாக மகிஷம், சிங்கம், வெண்குதிரை, புலி ஆகியவை உள்ளன. இந்த ஆலயத்தில் தற்போது புதிதாக இராஜகோபுரம் கட்டப்படுகிறது. புனர்நிர்மாணப் பணிகளும் நடைபெறுகின்றன. ஸ்ரீ வாராஹி விசேடதியான பஞ்சமி திதியின்போது, மாதந்தோறும் வரும் சுக்கில பஞ்சமி மற்றும் கிருஷ்ண பஞ்சமி நாள்களில், புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சமுக வாராஹி தாயாரின் ஆலயத்தில் தேங்காய் மூடியில் நெய் தீபம் ஏற்றி பக்தர்கள் பிரார்த்திக்கும் காட்சி மெய்சிலிர்க்கவைக்கும். இந்த நாட்களில் நெய் தீபம் ஏற்றிவேண்டினால் நினைத்தவை கைகூடும் என்பது பக்தர்களின் திடமான நம்பிக்கை. அம்மனின் அற்புதங்கள் சொல்லில் அடங்காதவை. கொடிய நோய்கள் நீங்குதல், கடன் தொல்லைகளில் இருந்து விடுபடல், குழந்தைப் பாக்கியம் கிடைத்தல், செல்வ வளம், மன அமைதி போன்ற பல நன்மைகள் வழிபாட்டினால் கிடைக்கின்றன. வேண்டுபவருக்கு வேண்டிய வரம் தரும் வாராஹி அம்மனை வணங்கி வளம் பெறுவோம்!



# போதை விலங்கை உடைத்து மாய உலகிலிருந்து மீள்வீர் இளைய சமுதாயமே!

■ சண்சியா வரதராசன்
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*2 ஆம் வருடக்கற்கை*

நவீன உலகின் கட்டுக்கோப்புக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனையும் சமூக வலைத்தளங்களும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளும் தன்பால் அடிபணியவைத்துவிட்டன. இதிலிருந்து மீளமுடியாத தன்மையே இன்று வக்கிரப் புத்தி எண்ணங்களாக உருவெடுத்துக் குற்றச்செயல்களிலும், போதைப் பழக்கவழக்கங்களிலும் ஈடுபடத் தூண்டுகிறது. அதிலும் இளைஞர் சமுதாயமானது அடுத்த தலைமுறையினருக்கு வழிகாட்டுவதை விடுத்து பாதாள உலகப் பாதையைநோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இளைஞர்களே முக்கிய அடித்தளமாகக் காணப்படுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை அதிகளவான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களாக இளையோர்கள் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

ஒரு காலத்தில் நம் தமிழ் இனத்திற்காக மாவீரர்களாக மாறி இன்று துயிலும் இல்லங்களில் தூங்கிக்கொண்டிருக்கும் நம் இளையோர் சமுதாயத்தினர் கல்வியிலும் அறிவிலும் நன்நடத்தையிலும் சிறந்தவர்களாக மிளிர்ந்தனர். ஆனால் இன்றைய இளைஞர் சமுதாயமோ போதையின் பிடிக்குள் சிக்கித் தவித்து மீளமுடியாமல் தங்களதும் தமது குடும்பத்தினதும் மகிழ்ச்சியைத் தொலைத்துக்கொண்டிருக்கின்றனர். இது தொடருமாகவிருந்தால் நம் இனத்தின் நிலைதான் என்ன? அடுத்த தலைமுறையினரின் நிலைதான் என்ன? இத்தகைய நிலையிலிருந்து இளைய சமூகத்தினரை எவ்வாறு மீட்கப்போகிறோம்?!


நம்முடைய இனத்தவர் வீர வரலாற்றின் நாயகர்களாகப் பேசப்பட்ட காலத்திலிருந்தே, அறிவுக்களஞ்சியமாகத் திகழ்கின்ற நூலகங்களிலேயே தமது நேரத்தை அதிக அளவில் கழித்தனர். அந்தக்காலத்தில் இன்ஸ்ட்டாகிராம், பேஸ்புக், வாட்ஸ்அப், டுவிட்டர் என எந்தவொரு வலையமைப்புகளும் அதிகமான புழக்கத்தில் இருக்கவில்லை. புத்தகங்களிலேயே தேடல்கள் இருந்தன. பதில்களும் நூல்களிலேயே கிடைத்தன. எங்கு எம் இனத்தின் அறிவு பெருகி விடப்போகிறதோ? கல்விமான்கள் விதியை மாற்றி விடுவார்களோ என்று பயம் கொண்ட வஞ்சகர்கள் சதிசெய்து தமிழ் இனத்தின் அறிவுச்சுடராக திகழும் யாழ்ப்பாணப் பொது நூலகத்தை தீக்கிரையாக்கினர். அதில் தமிழ் இனத்தின் வரலாற்று உண்மைகளைக் கூறும் பல ஓலைச்சுவடிகளும், நூல்களும், ஏடுகளும் எரிந்து சாம்பலாகிப்போயின.

இன்றும் தொடரும் இவ்வாறான சூழ்ச்சிகளைக் கடந்து, எம் இனத்தின் அறிவொளி பெருகவேண்டுமானால் இளையோர் சமுதாயம் போதைப் பழக்க வழக்கங்கள், வக்கிரப்புத்தி எண்ணங்கள் என்பவற்றிலிருந்து மீண்டெழவேண்டும். இளையோர் அதிகமாகக் காணப்படும் இடம் பல்கலைக்கழகங்கள் போன்ற கல்விச்சூழல்களே. அவ்வாறான பல்கலைக்கழகங்களுடாக புத்தகக் கண்காட்சிகள், நூலகம் பற்றிய விபரணப் படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தி இளைய சமூகத்தினருக்கு நூலகத்தின் மீதும், நூல்களின் மீதும் பற்றை ஏற்படுத்த வேண்டும்.

அத்தோடு சுயதொழில்களுக்கான பயிற்சிப் பட்டறைகள், போதை தொடர்பான விழிப்புணர்வு நாடகங்கள் என்பவற்றை நடத்திக்காட்டுவதன்மூலம் இளையோர் சமுதாயத்தினரைப் போதைப்பழக்க வழக்கங்களிலிருந்து திசைதிருப்பமுடியும். வடக்கில் வேரூன்றியிருக்கும் இந்த போதைப்பொருள் எனும் விருட்சத்தை வித்திட்ட சூழ்ச்சியாளர்களுக்கு, எமது இனத்தின் இளைய சமுதாயம் சேறுபூசவேண்டும். எம் இனத்தை மீண்டெழச்செய்யும் வல்லமை எமது கரங்களிலேயே உள்ளது என்ற உண்மையை உணர்ந்து இளையோர்களாகிய நாங்கள் அறிவிலும், நன்நடத்தையிலும் மிளிர்ந்தவர்களாக மாறுவதோடு அடுத்த தலைமுறையினருக்கும் முன்மாதிரியாகத் திகழ்வோம்.

"இளையோர் சமுதாயமே இன்றைக்கே விழித்தெழு விடை காணா எம் இனத்தின் விடுதலைக்காய் இன்றே விரைந்தெழு, விடியலுக்காய் விழித்துக் கொண்டிருக்கும் எம் இனத்துக்கு நீயாவது விமோசனம் கொடு.."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வறண்ட நாவில் வந்துசேருமா? ஒரு துளி நீர்

சிவகுமார் நிசாந்தினி
*2 ஆம் வருடம்,*
*ஊடகக் கற்கைநெறி, யாழ். பல்கலைக்கழகம்*

"நீரின்றி அமையாது உலகு" என்ற கூற்றுக்கு இணங்க, உலகிற்கு நீர் எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை உணரமுடிகிறது. நீரின்றி எந்த உயிரினமும் வாழமுடியாது.

அந்தப் பெறுமதிவாய்ந்த நீருக்காக அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மக்கள் திண்டாடிவருகின்றனர். நன்னீர்க் கிணறுகளின் பற்றாக்குறையால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. இங்குள்ள ஒரே கிணறும் வரண்ட நிலையில் உள்ளதால், கிராம மக்கள் பணம் செலுத்தி நீரைப் பெற்றுக்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. நன்னீருக்காக அயற் கிராமங்களுக்கோ அல்லது தூரத்திலுள்ள இடங்களுக்கோ செல்லவேண்டியிருப்பது மிகவும் வேதனைக்குரியது. வருங்கால சந்ததியினருக்காவது நன்னீர் கிடைக்கப்பெறுமா? என்பது இக்கிராம மக்களின் பெரும் கவலையாகும்.




இக்கிராமத்தில் இப்போது முன்பு இல்லாத சூழ்நிலையாக, சிறுநீர்த்தொகுதி தொடர்பான நோய்கள் அதிகளவில் பரவிவருகின்றன. பல முதியவர்கள் நீர்த்தட்டுப்பாட்டால் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பரிசோதனைகள் மூலம், அவர்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. நீர்த் தொட்டி வாகனங்கள்மூலம் கொண்டுவரப்படும் நீர் எவ்வளவு சுத்தமானது என்பது கேள்விக் குறியே! இந்த நீரைப் பணம்கொடுத்து வாங்கிய கிராம மக்கள், நோய்களையும் வாங்கிக்கொள்கிறார்கள் என்பது வேதனையான உண்மை.

சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை சுத்தமான குடிநீர் கிடைத்து ஆரோக்கியமாக வாழ்வது அவசியம். ஆனால் அது இக்கிராம மக்களுக்குக் கிடைக்காதது வருத்தத்திற்குரியது. உணவின்றி ஒருவர் சில நாள்கள் வாழலாம்; ஆனால் நீரின்றி ஒரு நாள்கூட வாழமுடியாது. இக்கிராமத்தின் வருங்காலம் பற்றி இப்போதே அச்சம் காணப்படுகிறது. வற்றிப்போன நன்னீர்க் கிணறுகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இயற்கையாகக் கிடைக்கவேண்டிய நீருக்கு இன்று பணம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கிராமங்களிலேயே இந்த நிலைமையென்றால், நகர்ப்புறங்களின் நிலை என்னவாக இருக்கும்?

இக்கிராம மக்கள் சித்தன்கேணி, சங்கரம் போன்ற இடங்களுக்கு இரு சக்கரவண்டிகளில் சென்று குடிநீர் கொண்டுவருகின்றனர். இந்த நிலைமை மாறாதா? நன்னீர் மீண்டும் நிறையக் கிடைக்காதா? என்ற கேள்விகள் அவர்களது மனதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. சில பகுதிகளில் மட்டுமே நீர்த்தொட்டி வாகனங்கள்மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூட எளியமுறையில் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது. பொதுக் கிணறுகள், நன்னீர்க் கிணறுகள் அனைத்தும் வற்றிப்போயுள்ளன. இந்த நிலையில், ஒரு கிராமத்திற்கு இரண்டு நீர்த்தொட்டிகள் போதுமானதா? இதுபற்றி யாரும் ஏன் சிந்திக்கவில்லை? ஒரு குடும்பத்திற்கு 20 லீற்றர் தண்ணீர் போதுமானதா? சற்றுச் சிந்தியுங்கள்! வருங்காலத் தலைமுறையினர் தண்ணீர் பிரச்சினையைச் சந்திக்காமல், நீர் கிடைத்து ஆரோக்கியமாக வாழ்வதே இன்றைய சந்ததியரின் எதிர்பார்ப்பு. இவர்களது கவலைகளால் பெருகும் கண்ணீர், தாகம் தீர்க்கும் தண்ணீருக்காகவே!

# பண்பாட்டில் மருகிவரும் யாழ்ப்பாணத்து உணவு



சந்திரசேகரம் கனாதீபன்
*ஊடகக் கற்கைகள் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

யாழ்.குடாநாடு பாரம்பரியத்தில் புகழ்பெற்று விளங்கும் பிரதேசமாகும். இங்கு கலாசாரம் சார்ந்த பண்பாடு மட்டுமின்றி, உணவுப் பாரம்பரியமும் சிறந்து விளங்கியது. யாழ்ப்பாண மக்களிடையே "புட்டு" எனும் உணவு பண்டைய காலத்திலிருந்தே மிகவும் பிரசித்தமாக இருந்தது. எமது ஈழத்து இளைய கலைஞர்கள் உருவாக்கிய "புட்டு வையன ஆச்சி நீத்துப் பெட்டியில" எனும் பாடல், நகைச்சுவையோடு கலந்து நமது பாரம்பரிய உணவின் மகத்துவத்தைப் புலப்படுத்துகிறது.

இந்த ஈழதேசத்தில் மிகச்சிறந்த மண்வளம் காணப்படுகிறது. கம்பு, வரகு, கேழ்வரகு, உளுந்து, பயறு என எண்ணற்ற தானியங்களின் கிடங்காக யாழ்ப்பாணத்தை ஒரு காலத்தில் கூறினோம்.

ஆயினும், இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தை எடுத்துநோக்குமிடத்து, எத்தனையோ பண்பாட்டு மரபுகள் அருகிவரும் நிலையில் உள்ளன. யாழில் எங்கு பார்த்தாலும் உடனடி உணவு விடுதிகள் தெருவுக்குத் தெரு திறக்கப்படுகின்றன. சர்வதேசத்திற்கு இடம்தரும் நாம் முதலில் தேசியத்திற்கு முக்கியத்துவத்தை வழங்கவேண்டும். பீட்சா கட், KFC, பர்கர் கிங், ஆர்.ஆர்.சேலம் பிரியாணி, காலிட்ஸ் பிரியாணி எனப் பல்வேறு வெளிநாட்டு உணவுகளுக்கு யாழ். மக்களும் அடிமைகளாகிவிட்டனர்.

இதனால், யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய உணவுகள் சில உணவகங்களில் கண்ணாடிப் பெட்டிக்குள் கண்காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருப்பதைப் போல உள்ளன. இந்த நிலை தொடர்ந்தால், யாழ்ப்பாணத்தை பன்னாட்டு நிறுவனங்களும் வெளிநாட்டு உணவகங்களுமே ஆக்கிரமிக்கும் நிலை உருவாகிவிடும். எதிர்காலச் சந்ததியினருக்கு நமது உணவுப் பாரம்பரியம் தெரியாமலேயே போய்விடும்.

இந்த உடனடி உணவுகளை மக்கள் தொடர்ந்து உட்கொள்வதால், பல்வேறு உடல் உபாதைகளுக்கு உள்ளாகின்றனர். எடுத்துக்காட்டாக, நீரிழிவு, இதய நோய்கள், புற்றுநோய், இரைப்பை சார்ந்த நோய்கள் போன்றவை ஏற்படுகின்றன. அத்தோடு, உடற்பருமன் அதிகரித்தல், அதிகரித்த செலவுகள் போன்ற பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரிடும். இதன்மூலம் நாம் விலைகொடுத்து வினையைத் தேடிக்கொள்கிறோம். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு ஆக்கிரமிப்பை ஏற்படுத்திய உடனடி உணவுப்பண்பாட்டைத் தவிர்த்து, பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளவேண்டும். இதற்காக, தற்கால சமூகத்தினரிடையே பாரம்பரிய உணவுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அது சார்ந்த கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகளை நடத்துவது சாலச்சிறந்தது.

பாரம்பரிய உணவுகளை இக்காலத்திற்கு ஏற்பத் தயாரித்துக்கொடுப்பதற்கான உத்திகளைக் கையாள்வது, இந்த உணவுப்பழக்கவழக்கங்களை இன்னும் பல காலங்களுக்குத் தக்கவைத்துக் கொள்வதற்கு உதவும். இதன்வாயிலாக, எமது உணவுப் பண்பாட்டை உலகுக்குப் பிரதிபலித்துக்காட்டமுடியும் மேலும், சிறந்த ஆரோக்கியமான உணவுகளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரத்தின் அரண் வழுக்கையாறு வளம் குன்றிப்போவதா?


கில்டா. தேவராசா
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



நீரின்றி அமையாது உலகு என்பது வள்ளுவர் வாக்கு. இக்கூற்றின் மூலம் நீரின் மகத்துவத்தை நாம் உணர்ந்துகொள்ளலாம். வடமாகாணத்தின் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைந்துள்ள ஒரேயொரு ஆறாக வழுக்கையாறு விளங்குகிறது. தெல்லிப்பழையில் உற்பத்தியாகி, தென்மேற்காகக் கந்தரோடை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய ஊர்களைக் கடந்து அராலிக்கு அருகே யாழ்ப்பாணக் கடலோடு கலக்கிறது. ஏறத்தாழ 16 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த ஆறு யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர்மட்டம், விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலைக்கு முக்கிய பங்காற்றுகிறது.

வரலாற்றுச் சான்றுகளின்படி, ஒரு காலத்தில் வளமிகு பகுதியாக வழுக்கையாறு விளங்கியது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலத்தடிநீரே முதன்மை நீராதாரமாக உள்ள நிலையில், மழைக்காலங்களில் பெருக்கெடுத்தோடும் வழுக்கையாறு நிலத்தடிநீரைச் செறிவூட்டுவதோடு விவசாயத் தேவைகளையும் நிறைவேற்றுகிறது. ஆற்றின் இருபுறமும் விளங்கும் விவசாய நிலங்களுக்கு இது தண்ணீர் வழங்குகிறது. நெற்பயிர் மற்றும் பிற பயிர்ச்செய்கைகளுக்கு இது பெரிதும் உதவுகிறது. வழுக்கையாறு அதைச் சூழ்ந்துள்ள தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் வாழ்விடமாகவும் விளங்குகிறது. இது பல்லுயிரியல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. யாழ்ப்பாணத்தின் பழம்பெரும் வரலாற்றோடு இணைந்து, கந்தரோடை அரசர்கள் வெட்டிய கடல்கால் எனப்படும் இந்த ஆறு சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை, அளவெட்டி, கந்தரோடை, தெல்லிப்பழை போன்ற ஊர்களின் வாழ்வாதாரத்திலும் பண்பாட்டிலும் முக்கிய பங்கு வகித்துள்ளது.





இன்று, கிராமவாசிகளின் வாழ்வாதாரத்துக்கு அச்சாணியாய் விளங்கும் இப்பருவகால ஆறு மழைவீழ்ச்சிக் குறைவாலும் காலநிலை மாற்றங்களாலும் நீர்ப்பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது. வெயில்காலங்களில் ஆற்றுப்படுக்கை முழுமையாக வறண்டுவிடுகிறது. உவர்நீர் ஊடுருவல் அதிகரித்துள்ளது. கழிவு மேலாண்மைக் குறைபாடுகள், மாசுபாடு, நகரமயமாக்கல் மற்றும் மக்கள்தொகை அதிகரிப்பு ஆகியவை ஆற்றின் நிலைமையை மேலும் மோசமாக்குகின்றன. அருகிலுள்ள பகுதிகளிலிருந்து கழிவுகள் ஆற்றில் கலப்பதால் நீர்த்தரம் குறைகிறது. சமையல் மற்றும் உணவுக்கழிவுகள் ஆற்றங்கரைகளில் கொட்டப்படுவதால் நீரோட்டத்துக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. விவசாயம் மற்றும் குடிநீர்த் தேவைகளுக்காக அதிக அளவு நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதால் ஆற்றின் நீர்மட்டம் தொடர்ந்து குறைகிறது. வாய்க்கால்களில் வள்ளற்கொடிகள் மற்றும் பிற செடிகள் மண்டிக் கிடப்பதோடு பிளாஸ்டிக் கழிவுகள் போன்ற மாசுபடுத்திகள் காணப்படுகின்றன.

இந்நிலையை மாற்றியமைக்க செயற்கை நிலத்தடி நீர் செறிவூட்டல் முறைகளை அறிமுகப்படுத்தலாம். கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவலாம். சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுப் பரப்புரைகளை மேற்கொள்ளலாம். மறுசுழற்சி மற்றும் கழிவு குறைப்பு முறைகளை ஊக்குவிக்கலாம் .ஆற்றின் நீர்த்தரம் மற்றும் நீர்மட்டம் குறித்த தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் உயிர்நாடியான வழுக்கையாற்றைப் பாதுகாக்க ஒரு நிலையான மேம்பாட்டுத் திட்டம் தேவை. இத்திட்டம் அறிவியல் சார்ந்த நீர் மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள், சமூகப் பங்களிப்பு, நிலையான வளர்ச்சிக் கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இவற்றின்மூலம் வழுக்கையாற்றின் வளங்களைப் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

## சடமாக்கியதோ தேன்மடியில்...

நீதிக்காய்த் துடிக்காத நெடிதாளும் சப்பிகளே
சாதித்ததென்ன கட்டடங்களோ...? போதித்த
ஆன்மீகமும் அரசியலும் சடமாக்கியுந்தனை
வான்மடியில் கிடத்தியதோ சாந்தா!

கட்டுவதும் இடிப்பதும் கொட்டுவதும் நமக்கு
பட்டுவாடா செய்வதே வேலை ஒட்டியதாம்
மண்ணுக்காய் தம்மையீந்த
குடும்பங்களை வாழ்விக்க
எண்ணிய கரங்களுண்டோ? (சொல்)

ஆர்.பிரகாஷ்



புதன்பொய்கை
க்கு
நீங்களும்
எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பஞ்சரத உற்சவம்






மன்னார், ஜூன் 11

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழாவின் விசேட திருவிழாவான தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.

கடந்த மாதம் 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வருடாந்தப் பெருவிழா நடைபெற்றுவரும் நிலையில் தேர்த்திருவிழா ஆலயத்தின் பிரதமகுரு தியாகராஜா கருணானந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. நேற்று திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும், உற்சவமும் இடம்பெற்றன. (எ-41)



படங்கள்: ஐ.சிவசாந்தன்



யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (எ)




இலங்கை ரயில் நிலையங்களுக்கு இடையே, மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் நடத்தப்பட்ட, சிறந்த பசுமை ரயில் நிலையத்துக்கான போட்டியில் பளை ரயில் நிலையம் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான சான்றிதழ் ரயில் நிலைய அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (எ-25.9)



# மணிவிழா வாழ்த்து

Congratulations!

எமது பாடசாலை அதிபர்

**திரு.துரைராஜா யேசுதானந்தர்**

**(SLPS-1,B.Ed, Dsm, PGDEM)**




அவர்கள் இன்று 11.06.2025 ஓய்வு பெற்று மணிவிழாக் காணும் இந்நாளில் அவருடைய மகத்தான சேவையினைப் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

முல்லை மண்ணில்
முத்தென விளங்கிடும்
மல்லாவிதனிலே மத்திய கல்லூரியில்
மூவாறு ஆண்டுகள் முதல்வராய்ப் பணி செய்தீரே!
அயராத முயற்சியுடன் அர்ப்பணிப்பான சேவையுடன்
கல்வியும்' ஒழுக்கமும் கண்ணியமாய் திகழ்ந்திட்ட
கல்விப் பணியதைக் கச்சிதமாய் செய்தீரே!
உங்கள் உத்தம சேவையை
எங்கள் இதயத்திலே இருத்தி
மன நிறைவுடன் வாழ்த்துகின்றோம்
நீடுழி வாழ்க வென...!

வாழ்த்துவோர்:
**பழைய மாணவர் தாய்ச் சங்கம்**
**மு/ மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலுக்காக வியூகம் வகுக்கும் பெரமுன

கொழும்பு, ஜூன் 11

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் மொட்டுக் கட்சி அடைந்துள்ள வெற்றியை அடுத்து, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வியூகம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சாணக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நாம் முன்னேறி இருக்கிறோம். நாங்கள் வீழ்ந்துகிடந்த இடத்தில் இருந்து எழுந்திருக்கின்றோம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதாக இருந்தால் இதைப்போன்று ஐந்து மடங்கு முன்னேற வேண்டும். அதற்கான இலக்கை நாம் தயாரித்துவைத்துள்ளோம்.

கிராமங்களுக்கு அதிகசேவை செய்தது எமது மொட்டுக் கட்சிதான். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறமுடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. மொட்டுக்கட்சி உறுப்பினர்கள் திருடர்கள் என்று சொல்லும் இந்த அரசாங்கம் ஆட்சி அமைப்பதற்காக எமது உறுப்பினர்களுடன் இரகசியமாக பேசுகிறது - என்றார். (எ-75)

## ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உப அலுவலகம் - நீர்வேலி**

**ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்**

**வட்டாரம் -07 , குருந்தடி ஒழுங்கை - ஆதன இல - 22**

யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -07 , குருந்தடி ஒழுங்கை ஆதன இல : 22 ஆனது T. சுந்தரலிங்கம் மேற்பார்வை : இிராஜலெட்சுமி சுப்பிரமணியம் என ஆதன பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது நொத்தாரிசு திரு கனகரத்தினம் கேசவன் அவர்களால் வரையப்பட்ட 15347 ஆம் இலக்க 2016.08.07 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் குமாரவேலு தேவசகாயம் மறுநாமம் தேவசகாயம்பிள்ளை சுந்தரலிங்கம் என்பவரால் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. பின்னர் குமாரவேலு தேவசகாயம் மறுநாமம் தேவசகாயம்பிள்ளை சுந்தரலிங்கம் என்பவரால், நொத்தாரிசு திருமதி யசோதா சுகந்தன் என்பவரால் வரைந்த 319 ஆம் இலக்க 07.05.2022 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் அவரின் மகளான அருட்பிரசாத் பெண் சுஜாதாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

நீர்வேலி தெற்கு நீர்வேலியைச் சேர்ந்த குமாரவேலு தேவசகாயம் என மறுநாமம் கொண்ட தேவசகாயம்பிள்ளை சுந்தரலிங்கம் என்பவரால் 26.08.1961 ஆம் திகதி நொத்தாரிசு த.சச்சிதானந்தன் முன்பாக 3207 ஆம் இலக்கத்தில் தனது பெற்றோர் காலஞ்சென்ற குமாரவேலு தேவசகாயம் என மறுநாமம் கொண்ட தேவசகாயம்பிள்ளையும் பெண் தங்கமும் இதன் பின்னால் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்திற்கு ஆதிச் சொந்தக்காரர்கள் என்றும் அவர்கள் குறித்த ஆதனத்தை எதுவித தங்கு தடைகளுமின்றி ஆண்டனுபவித்து தத்துவம் எடுக்கவேண்டிய பணத்தொகைக்கு குறைவான மரணச்சொத்துக்களை விடுத்தும் தமது சொத்துக்களிற்கு ஏக உரித்தாளியாக அவரின் மகனான தன்னை விடுத்தும் மரணிக்க இதன் பின்னால் காணும் ஆதன இடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தனக்கு பிதா. மாதா வழி முதுசமாக வந்தடைந்தது எனவும் பிதா, மாதா மேற்குறித்த குமாரவேலு தேவசகாயம் என மறுநாமம் கொண்ட தேவசகாயம்பிள்ளையும் பெண் தங்கமும் ஆகியவர்களின் மரணத்தின் பின் தான் குறித்த ஆதனத்தை தனது மாதா, பிதா வழி முதுசமாக இன்று வரை எதுவித தங்கு தடையுமின்றி ஆட்சி செய்து வருகின்றேன் எனவும் நொத்தாரிசு திரு. கனகரத்தினம் கேசவன் முகதாவில் 15347/07.08.2016 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் செய்வெளிப்படுத்தியிருந்தார்.

**ஆதன இடாப்பு:**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி , கோப்பாய் கோவிற்பற்று , நீர்வேலி இறை, கோப்பாய் பிரதேச செயலகம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை , நீர்வேலி தெற்கு , நீர்வேலி J/268 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட " கோம்பவுடை" நில.பர. 1 ஒன்று குளி 7 1/2 ஏழரையும் வீடும் செய்பயிர்களும் வான் பயிர்களும் வடமேற்கு மூலையிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும்.

**எல்லைகள் :-**

கிழக்கு : ஒழுங்கை

வடக்கு : கையொழுங்கை

மேற்கு : வல்லிபுரம் சண்முகத்தின் ஆதனம்

தெற்கு : ஒழுங்கை

இவ் ஆதனம் 7890 ஆம் இலக்க 2024.09.10 ஆம் திகதிய நில அளவையாளர் திரு. P. புஸ்பராஜா வரைந்த நில அளவைப்படத்தின் படி துண்டு 1 எனக்காட்டப்பட்ட பரப்பு 1 குளி 8 இற்குரிய ஆதனமுமாகும்.

தற்போது இவ் ஆதனத்தினை அருட்பிரசாத் பெண் சுஜாதா என்பவர் ஆதனப் பதிவேட்டில் தனது பெயரிற்கு மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தர முடியும் என்பதுடன் ஆட்சேபனை ஏதும் இல்லாதவிடத்து அல்லது யாரேனும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **"அருட்பிரசாத் பெண் சுஜாதா"** என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு இவ் ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர் ,**
**வலிகிழக்கு பிரதேசசபை**
**புத்தூர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 06 . 1990



மறைவு 07 . 06 . 2025

### செல்வராசா மாலவன்

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா மாலவன் அவர்கள் கடந்த (07.06.2025) சனிக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வராசா - தவமணி தம்பதியினரின் ஏகபுத்திரனும், தாட்ஷாயினியின் அன்புக் கணவரும், தபேந்திரன் - கலைச்செல்வி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கதிரேசன் மற்றும் சின்னத்தம்பி, கந்தசாமி, சிவக்கொழுந்து, ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும், பாக்கியம், உமாதேவி, சறோசாதேவி, ஐ.வேலுப்பிள்ளை, மகாலிங்கம் ஆகியோரின் மருமகனும் லவகீத்தா, சினேகா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி தெற்கு,**
**கைதடி**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 01 . 1942



மறைவு 09 . 06 . 2025

### அருச்சுனன் மகேஸ்வரி

மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருச்சுனன் மகேஸ்வரி அவர்கள் (09.06.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலன் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருச்சுனனின் அன்பு மனைவியும், விஜயரட்ணம் (விசயன்), குணசேகரம் (சிறி), காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரன் (ஜெயம்), ஜெயதாசன், ஜெயகுமார் (முத்து) மற்றும் ஜெயாபரன் (சுவிஸ்), புவனாம்பாள் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2025) வியாழக்கிழமை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**லோட்டன் வீதி,**
**மானிப்பாய்**

**தகவல்.**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாசகர்களை...

எடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் நலன்சார் செயற்பாடுகளில் பங்கேற்கும் சகல உத்தியோகத்தர்களுக்குமான ஆலோசனைக் கலந்துரையாடல் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் ஓய்வுபெற்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்த சேகரன் வளவாளராகப் பங்குபற்றி கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது அவர், வடக்கு மாகாணத்தில் யாசகம் பெறுபவர்களால் ஏற்படும் பிரச்சினைகளையும், யாசகம் சார்ந்த சட்டங்களையும் மத்திய மாகாண ரீதியில் அல்லாது சகலரும் ஒன்றிணைந்த சட்ட ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவேண்டும் என கோரியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே, பொது இடங்களில் யாசகம் பெறுபவர்களைக் கட்டுப்படுத்த கடந்தகாலங்களைப் போன்று தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். (அ-ம-இ)

## தையிட்டி...

பின்னர் அவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகாக வசிக்கும் தமிழர்களும், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழர்களும் விகாரையை எதிர்க்கவில்லை. ஆனால், புலம்பெயர் தமிழர்களே விகாரைக்குக் கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்துவருகின்றனர். தங்களின் சுயலாபத்துக்காக விகாரையை அடிப்படையாக வைத்து திட்டமிட்டுப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர் - என்றனர். (அ-ம-26)

## ஏழாலையில்...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிள்களில் சென்ற நால்வரைக் கொண்ட குழுவினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார், சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் முன்பகை காரணமாகவே இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஏனைய மூன்று சந்தேகநபர்களும் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

## 68 கைதிகள்...

கூற்றுப்படி, 2024ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையின்போது 57 கைதிகளும், 2025ஆம் ஆண்டு சுதந்திர தினத்தின்போது 11 கைதிகளும் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யாதபோதிலும் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பணிநீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலை ஆணையர் நாயகம் துஷார நிஷாந்த உபுல்தெனியவை, கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தியபோதே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், வெசாக் போயா பண்டிகையின் போது, நாடு முழுவதும் உள்ள 29 சிறைச்சாலைகளில் இருந்து 338 கைதிகள் விடுவிக்கப்பட்டதாகவும், அவர்களில் குறைந்தது இரண்டு பேர் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ம-இ)

## அதிகார...

லும் எச்.அத்துல திலகரத்ன என்ற கைதியின் பெயர் இல்லை. எனவே, அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பினர் நீதியமைச்சின் முன்பாக நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை நீதியமைச்சின் காரியாலயத்துக்குள் அழைத்து அவர்களுடன் சுமுகமான முறையில் அமைச்சர் கலந்துரையாடினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கைதி விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடந்த 6ஆம் திகதி ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இந்த விடயங்களை ஆராய்ந்து அன்றைய தினமே ஜனாதிபதி செயலகத்துக்கு 15 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை அனுப்பினேன். ஜனாதிபதியின் அதிகாரம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமையை அதில் சுட்டிக்காட்டினேன். அந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு ஜனாதிபதி செயலகம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கடந்த 7ஆம் திகதி முறைப்பாடளித்தது.

இந்த விவகாரத்தில் நீதியமைச்சு துரிதமாகச் செயற்படவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுவது அடிப்படையற்றது. அரச உயர் அதிகாரிகளை அமைச்சின் தீர்மானத்துக்கு அமைய பதவி இடைநிறுத்த முடியாது. அதற்கு வழிமுறைகள் உள்ளன. இந்த விடயத்தில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தை விசாரணைக்குட்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகிறது.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தை சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தயாரிக்கப்பட்டு அன்றே மும்மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. ஜனாதிபதி தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத்த யோசனைக்கு அமைவாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் உயர் அதிகாரத்தை முறைகேடான வகையில் பயன்படுத்தி இந்த கைதி விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பில் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-எ-இ)

## தேர்த்...

ஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

மூன்று பவுண், ஒன்றரைப் பவுண், ஒன்றரைப் பவுண் என ஆறு பவுண் தங்கச் சங்கிலிகளே காணாமற்போயுள்ளன. மானிப்பாய் பொலிஸார் இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

## சட்டவிரோதக்...

போதனாமருத்துவமனைக்குக்கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்தமையை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். சட்டவிரோதக் கருக்கலைப்பால் ஏற்பட்ட அளவுக்கு அதிகமான குருதிப்போக்கே இறப்புக்குக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ம-26-125)

## வற்றாப்பளை...

இவ்வாறு உயிரிழந்தவராவார். ஒட்டுசுட்டான், மாங்குளம் வீதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தூக்கக் கலக்கம் காரணமாக, கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் பாலமொன்றுடன் மோதியுள்ளது. இதையடுத்து அந்த இளைஞர் வாய்க்காலுக்குள் தூக்கி எறியப்பட்டு உயிரிழந்துள்ளார். (அ-ம-26-113)

## சிங்கள...

குள் அழைத்துச்செல்லப்பட்டனர்.

விகாரையில் இடம்பெற்ற வழிபாடுகள், விகாரைக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டங்கள் தொடர்பில் செய்தி சேகரிப்பதற்காக வருகைதந்திருந்த சிங்கள ஊடகவியலாளர்களே இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, 'எம்மை இத்தனை காலமாக ஏன் விகாரைக்குள் அனுமதிக்கவில்லை. நாமும் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள்தான்' என்று தமிழ் ஊடகவியலாளர்கள் பொலிஸாருடன் முரண்பட்டனர். இதன் பின்னர், தமிழ் ஊடகவியலாளர்களும் விகாரைக்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. (அ-ம-26)

## திஸ்ஸ...

பௌர்ணமி தினமான நேற்று தையிட்டி திஸ்ஸ விகாரையில் பொசன் வழிபாடுகள் இடம்பெற்றன. இதைமுன்னிட்டு சிங்கள மக்கள் பேருந்துகளில் அழைத்துவரப்பட்டனர். அத்துடன், விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி நூற்றுக்கணக்கான தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், வழமைக்கு மாறான பதற்றநிலையொன்று தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதியில் நேற்று ஏற்பட்டிருந்தது. வழிபாட்டுக்காக வந்த சிங்கள மக்களும், அவர்களுடன் வந்த ஊடகவியலாளர்களும் தனியான பாதையூடாகவே அழைத்துச்செல்லப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான சிங்கள மக்களைக் கொண்டுவருவதற்கு சில சிங்களக் கடும்போக்குச் செயற்பாட்டாளர்கள் அண்மைக்காலமாக தீவிரமாக இயங்கிவந்ததால், வழக்கத்துக்கு மாறாக நேற்று உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கொழும்பிலிருந்து கலகமடக்கும் பொலிஸார் களமிறக்கப்பட்டதுடன், தண்ணீர்த்தாரை வாகனமும் கொண்டுவரப்பட்டிருந்தது. அத்துடன், யாழ்ப்பாணத்தில் உள்ள பல்வேறு பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். எனினும் எவ்வித அசம்பாவிதங்களும் அங்கு ஏற்படவில்லை.


நேற்றைய போராட்டத்தில் தையிட்டியில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா, தமிழ்த்தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் வடக்கு மாகாணக் கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரா, மக்கள் போராட்ட முன்னணியின் முக்கியஸ்தர் ராஜ்குமார் ராஜீவ்காந், தமிழ்த்தேசியப் பேரவையின் உள்ளூராட்சிசபைகளின் உறுப்பினர்கள், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## காற்றாலை...

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் சூழலியலுக்கு விரோதமான பல செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. இவற்றில் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் கனியமணல் அகழ்வு ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகள் மிகப்பெரியளவில் காணப்படுகின்றன. இந்த விடயங்களுக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் உள்ளிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளனர். எனினும், அத்துமீறல்கள் தொடர்ந்தே வருகின்றன. எனவே, அவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக மன்னாரில் நாளை (இன்று) பேரணியொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. பேரணியைத் தொடர்ந்து, ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதற்காக மனுவொன்று மன்னார் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்படும் - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது. சித்தி ரத்தேர் பவனியின்போது அடியவர்கள் ஆலய வீதியில் ஏராளமான சுளகுகளில் திருவமுது படைத்து வழிபட்டனர். (சு-25,66)

# கொள்கலன்கள் விவகாரத்தில் வெளிப்படைத்தன்மை தேவை

## வலியுறுத்துகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஜூன் 11

கொள்கலன்கள் விவகாரம் தொடர்பில் உண்மை தெளிவுபடுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுங்கத்தில்எந்தவிதப்பரிசோதனைகளும் இல்லாமல் சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட 323 கொள் கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் கடுமையான சர்ச்சைகள் எழுந்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டை சுங்கத்தொழிற்சங்க ஒன்றியமே முதலில் முன்வைத் தது. சுங்கப் பணியாளர்கள் சங்கம் மற்றும் சிரேஷ்ட சுங்க அதிகாரிகள் உட்பட சுங்கத்தைப் பிரதி

நிதித்துவப்படுத்தும் பெரும்பாலான தரப்பினர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

முறையான பரிசோதனை நடைமுறைகள் எதுவும் பின்பற்றப் படாது அதிக ஆபத்துள்ள கொள் கலன்கள் சில நாள்களுக்குள் அவசரமாக விடுவிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கலன்களை விடுவிப்பதால் நாட்டுக்கு சேர வேண்டிய வருமான இழப்பு, தடை செய்யப்பட்ட பொருள்களை விடுவித்தமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இது திருட்டை உருவாக்குகின்றது. ஊழல் செய்பவர்களுக்கு வழிசமைக்கப்பட்டுள்ளது. ஊழலை ஊக்குவிக்கும் நடவடிக்கைக்கே இங்கும் வழிதிறந்து கொடுக்கப்பட்டுள்ளது. கொள்கலனைப் பரிசோதனை செய்யும் உபகரணங்களுக்காக பில்லியன் கணக்கில் செலவிடப்படுகின்றன. ஆனால் இன்று 60 சதவீதக் கொள்கலன்கள் எந்தவிதப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதில்லை.

இந்தக் கொள்கலன்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தாமல் ஆபத்தான பொருள்கள் இல்லை என்று எவ்வாறு கூறமுடியும்?

அவற்றில் ஆயுதங்கள் இருந்தன என்றும் பேசப்பட்டது. இதனால் தேசியப் பாதுகாப்புக்கு பெரும் ஆபத்து காணப்படுவது தெளிவாகத் தெரிகிறது. இது தொடர்பாக வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்-என்றார். (எ-44)

# ரில்வின் சில்வா சீனா பயணம்!

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின்பேரில், மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட ஒரு குழு சீனாவுக்கு விஜயம் செய்துள்ளது. இதன்போது சீனாவின் ஜெஜியாங் மாகாண ஆளுநர் லியு ஜீயுடனான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சிறப்புச் சந்திப்பின்போது, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, மக்கள் விடுதலை முன்னணிக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான நட்புறவு குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

ஊழல் நிறைந்த ஆட்சியை மாற்றுவதற்காக ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், நாட்டின் பொருளாதாரத்தை விரைவாக மேம்படுத்தும் திட்டத்துடன் முன்னேறிவருவதாக ரில்வின் சில்வா சந்திப்பில் வலியுறுத்தினார். (சு-இ)


வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் பின்வரும் வேலையாட்கள் தேவை.
➤ சமையலாளர் - காலை 6.30 - மாலை 5.00 மணிவரை சம்பளம் நாள் ஒன்றிற்கு 2000/-
(துப்பரவு, நம்பிக்கை, நேர்மையுள்ளவர் விரும்பத்தக்கது.)
➤ வயோதிபப் பெண் மற்றும் ஆணை தங்கியிருந்து பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.
ஒருவரை பராமரிப்பதற்கு நாள் ஒன்றிற்கு 3500/-
தொடர்பு:- 076 071 2085

வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண், பெண் பில் கிளார்க் தேவை. கணனி அறிவு விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 244 9834 / 077 730 4013

வேலையாட்கள் தேவை
இராமநாதன் வீதி, கலட்டிச் சந்தியில் அமைந்துள்ள "zen cafe" எனும் கடையொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
➤ தேநீர் தயாரிப்பவர் (Tea maker)
➤ குளிர்பானம் தயாரிப்பவர் (Fresh juice maker and milkshake maker)
075 966 0591

காணி விற்பனைக்கு
சுன்னாகம் சூராவத்தை கிராமத்தில் அமைந்துள்ள ஓம் சீரடி சாயி ஆலயத்திற்கு அருகாமையில் 3 பரப்பு மேட்டுக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
(விலை பேசித்தீர்மானிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 317 0720 (செல்லா)
077 047 5511 (ஈஸ்வரன்)

## மரண அறிவித்தல்



**சண்முகம் நாகம்மா**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இருபாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நாகம்மா அவர்கள் கடந்த (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-பார்வதிப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தனுஸ்கோடி-தெய்வானைப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும் லோகநாதன், தியாகராசா, விமலாதேவி, இந்திராதேவி, காலஞ்சென்ற லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் முத்துப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான பத்தினிப்பிள்ளை, கனகம்மா, தங்கம்மா, தையல்முத்து, சிவகாமிப்பிள்ளை, தம்பிராசா, லீலாவதி ஆகியோரின் சகோதரியும் சின்னம்மா, நாகம்மா, காலஞ்சென்றவர்களான வைத்தியநாதர், இளையதம்பி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாசமலர், நிர்மலாராணி, புவனேஸ்வரகுமார், குகதாசன், காலஞ்சென்ற கமலநாயகி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தகிர்சன், லிதர்சன், பிரணவி, நிதர்சன், தர்சன், லக்சன்யா, அபிராம், அருண் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கிசானின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.06.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் (செந்தவளவு இருபாலை கிழக்கு, இருபாலை) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
076 070 1564 இந்திராதேவி (மகள்)
076 402 8876 விமலாதேவி (மகள்)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org